Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 13 ஆவணி 27 றஜப் 21 ஞாயிற்றுக்கிழமை (12—9—71) இதழ் 213

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன
கொழும்பு

# இலங்கை - இந்திய தொழில் ஒத்துழைப்பு

## உற்பத்திப் பொருட்களை இந்தியா வாங்கும்

(கே. ஜி. நவரத்தினு)

(நமது நிருபர்)

இந்தியாவும், இலங்கையும் கூட்டாகச் சேர்ந்து றப்பர், காரியம், மட்டுப்படலவ, உப்பு, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்கள் ஆகிய துறைகளை இலங்கையில் ஆரம்பிக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இத் துறைகளில் அரசாங்கமும் தனியாரும் இதில் மூலதனம் செலுத்திப் பங்கு பெறுவர். இலங்கையில் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் இத் துறைகளில் பங்கு கொள்ளும் இத் துறைகளில் உற்பத்தி செய்யப்படும் மேலதிகப் பொருட்களை இந்தியா கொள்வனவு செய்வதற்கும் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கையும் இந்தியாவும் இப்போது ஏற்றுக் கொண்டுள்ள உத்தேச பண்டமாற்று ஒத்துழைப்பு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான உத்தேசத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இந்த ஒத்துழைப்புத் திட்டம் இலங்கை-இந்திய அதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவினதும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங்கினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

இதே நேரத்தில் இந்தியர் ஒத்துழைப்புடன் இலங்கையில் ஒரு திட்டத்தை நடைமுறைப் படுத்த வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின உடன்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 266 அறைகளைக் கொண்ட இலங்கையில் மிகப் பெரிய ஹோட்டல் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கு 2 கோடி ரூபா செலவாகுமெனவும், அடுத்த மாதம் இதற்கான வேலை ஆரம்பமாகுமெனவும் தெரிகிறது.

1967-ம் ஆண்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கைக்கு வந்த பொழுது இதற்கான அடிப்படை இடப்பட்டது. இதற்கு இரு வருடங்களின் பின் இரு பகுதியினரிடையேயும் அமைந்துள்ள பொருளாதார ஒத்துழைப்புக் கமிட்டிகள் கூடி ஆராய்ந்தன. இவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலேயே இப்பொழுது இக் கூட்டு ஒத்துழைப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறதாகத் தெரிகிறது.

இந்த ஒத்துழைப்புக் காரணமாக இந்தியாவுக்கு பொருட்களின் ஏற்றுமதியை இலங்கை அதிகரிக்குமென அறியப்படுகிறது.

## "முன்னைய அரசாங்ககாலத்தில் பொறுப்பற்ற முறையில் இ. போ. ச. நியமனங்கள்"

—விசாரணைகுழு

கோட்டை, சனி

முன்னைய அரசாங்க காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் செய்யப்பட்ட நியமனங்கள் பொறுப்பற்ற முறையிலும், ஒழுங்கற்ற முறையிலும் நடந்துள்ளதாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினுல் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இன்று தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், 1970-ம் ஆண்டு யூன் மாதம்வரை நியமனங்கள் ஒழுங்கற்றதென்று குழு தெரிவித்திருக்கிறது.

20 ஆயிரம் புதிய நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவென்றும் இதனுல் தேவையற்ற விரயம் ஏற்பட்டுள்ளன என்றும் விசாரணைக்குழு தெரிவித்திருக்கிறது.

இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு அரசடிப்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தின்போது கதாப்பிரசங்கம், கூட்டுப்பிரார்த்தனை, விசேட மேளக்கச்சேரி என்பன நடைபெறவுள்ளன.

(கு வி. ம.)

0 0 0

இணுவில் அம்பலவாணர் கந்தசுவாமிகோவில் மண்டபத்தில் இன்றுமாலை 6-30 மணிக்கு தமிழக அறிஞர் திரு கி. வா. ஜகந்நாதன் 'விழிக்குத்துணை' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## காலமானுர்

மாஸ்கோ, செப். 11

சோவியத் ரஷ்யாவின் முன்னுள் பிரதமர் திரு குருஷ்சேவ் இன்று மாரடைப்பினுல் காலமானுர். இவர் மாஸ்கோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு இவர் மரணமானுர்.

## இலங்கை அன்பர்கள் உள்ளத்தில் கி. வா. ஜ.

[நமது நிருபர்]

"இந்தியத் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் என்னை இலங்கையைச் சேர்ந்தவனுகவே சொல்லி பாராட்டுவார்கள். அப்படியே இலங்கையிலுள்ள தமிழ் அன்பர்களும் தங்களில் ஒருவனுகவே என்னை அன்பு செலுத்துகிருர்கள்."

இவ்வாறு நேற்றுக் காலை பலாலி விமான நிலயத்தில் வந்திறங்கிய கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் நமது நிருபரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

"ஆண்டுக்கு ஒருமுறை இலங்கைக்கு வரும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது எப்பொழுது வந்தாலும் சமயச் சொற்பொழிவுகளும் இலக்கியச் சொற்பொழிவுகளும் பல இடங்களில் ஆற்றுவது உண்டு. தமிழர்கள் வாழும் எல்லா இடங்களுக்கும் சென்று அவர்களுடைய கனிந்த அன்பை அனுபவித்திருக்கிறேன். என்னுடைய மணி விழாவை இந்தியாவிலும் பார்க்க சிறப்பாக இலங்கையில் கொண்டாடினுர்கள் இத்தகைய பேரன்பை என்றும் மறக்க முடியவில்லை ஆதலால் அன்பர்கள் எங்கே அழைத்தாலும் அங்கே சென்று சொற்பணியைச் செய்து வருகிறேன்.



"கலைமகள்" தீபாவளி மலர் சம்பந்தமான பணிகள் மிகுதியாக இருப்பதனுல் இந்தச் சமயத்தில் வெளியூர்களுக்குப் போவதில்லை என இருந்தும், அன்பர் திரு. பூபால சிங்கத்தின் மகள் செல்வி ஜெயந்தியின் நடன அரங்கேற்றத்துக்கு தலைமை வகிக்கும்படி அன்பர் திரு. பூபாலசிங்கம் வற்புறுத்தியதன் பேரில் இங்கு வந்துள்ளேன்.

"என்னை எதிர்பார்த்து நிற்கும் பல அன்பர்களைப் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தம் எனக்குண்டு. ஏதோ என்னுலியன்றளவு இரண்டொரு விழாக்களில் கலந்து கொண்டு 13-ந் திகதி தாயகம் திரும்புவேன் இறைவன் திருவருள் இருந்தால் மறுமுறை யாவரையும் திருப்திப் படுத்த முயலவேன்" என்ருர்.

## கி. வா. ஜ. வுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் நேற்றுக்காலை பலாலி விமானநிலையத்தில் வந்து இறங்கிய போது அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னுள் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸ்ரீகாந்தா, கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, நல்லூர் எம். பி. திரு சி. அருளம்பலம், சுவாமிநாதத்தம்பிரான், பாரிஸ்டர் எம். சிவானந்தன், திரு. எம். பூபாலசிங்கம், திரு. எஸ். ராஜேந்திரம் குருக்கள் உட்பட பலர் மாலைசூட்டி வரவேற்றுர்கள்.

விமான நிலையத்திலிருந்து அவர் நீர்வேலிக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

## எதிரிக்கு பத்து வருட கடுழியம்

(நமது காலி நிருபர்)

காலி அசைஸ் நீதிமன்றத்தில் நடைபெற்ற கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு நீதியரசர் டி. டபிள்யூ. எம். ஸ்ரீமன்ன 10 வருடகடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினுர்.

மாத்தறை தலைவட்ட வரல பொலிஸ் பகுதியில் சென்ற வருடம் யூலை 25-ந் திகதி முனிசாமி மாடசாமி என்பவர் கண்டாக் தோட்டத்தைச் சேர்ந்த முனியாண்டி ராமலிங்கம் அல்லது அனதுபமன் ராமலிங்கம் செல்லமுத்து ஆகியோரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

காலி அசைஸ் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இது கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செய்யப்படவில்லையென்று கைமோசக் கொலை முயற்சியென்றும் எதிரி ஏற்றுக்கொண்டதை நீதியரசர் ஸ்ரீமன்னவும் வழக்காளியின் வழக்கறிஞரும் ஏற்றுக் கொண்டனர் இதைத் தொடர்ந்து மேற்கண்ட தீர்ப்பை நீதியரசர் வழங்கினுர்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஜனுப் எஸ். ஏ. எம். பாரூக் ஆஜரானுர்.

# கட்சி அரசியலும் எதிர்க்கட்சியும்

கட்சி அரசியலும். எதிர்க்கட்சியும் செல்வம் கொழிக்கும் நாட்டுக்குத் தேவையில்லை. நம் போன்ற ஏழை நாடுகளுக்குத்தான் இது அவசியம் தேவையெனச்சிலர் கருதுகிறார்கள். இக் கருத்தும் சரியல்ல என்றே நான் நினைக்கிறேன் ஆளும் கட்சி வழிதவறாது இருக்க உதவும் என்பதால் ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி ஒன்று இருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்.

## ஏழை நாட்டிற்கு கட்சி தேவையில்லை

செல்வம் கொழிக்கும் நாட்டை விட ஏழை நாட்டிற்குத்தான் கட்சிகளே இல்லாதிருப்பது மிகவும் அவசியம். இந்தியாவைப் பொறுத்த வரையில் இங்கே நாம் 3 விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கும். இங்கே சாதி வேற்றுமைகள். சமய வேற்றுமைகள். ஏழ்மை என்ற இந்த மூன்றும் இருக்கின்றன. இந்நிலையில் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, வருகின்றவர்களை மக்கள் பிரதிநிதி என்று சொல்ல முடியாது தம் சாதியின் காரணமாகவும் சமயத்தின் பெயரைச் சொல்லியும் பலர் பிரதிநிதிகளாக வந்துவிடுகிறார்கள். தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

## கீழேயிருந்து தொடங்க வேண்டும்

குறைந்த பட்சம் கிராமப் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள், நகர சபைகளிலாவது கட்சிகள் புகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவைகளில் சோஷலிசம். கம்யூனிசம் போன்ற சித்தாந்தங்களுக்கு இடமேது? இவைகளுக்குள்ள

வேலை பால் விநியோகித்தல்! தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் நல்ல குடி தண்ணீர் கிடைக்கச் செய்தல் போன்ற மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்து உதவுவதுதான் ஒருவர் காங்கிரஸ் காரராகவோ. பொது உடைமையாளராகவோ? இருந்தாலும் இந்த வேலைகளைச் செய்கையில் அவரது கட்சியினால் இந்த வேலைகள் எவ்வாறு பாதிக்கப்படும்? எனவே கட்சிசார்பின்மை என்பதை நாம் கீழே இருந்து தொடங்கவேண்டும்.

## சிறுபான்மையினரின் ஆட்சியே

இன்று தேர்தலில் நடப்பதென்ன? தலைமை அமைச்சர் என்பவர் நாடு முழுவதன் பொறுப்பை ஏற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் அவரை ஒரே கட்சியினர்தான் தேர்ந்தெடுக்

தானே சொல்லவேண்டும்.? ஆகையால் பெயருக்குப் பெரும்பான்மையோரின் ஆட்சியென்று சொல்லப் படுகிறதேயன்றி உண்மையில் இது சிறுபான்மையோரின் ஆட்சிதான்.

## சர்வாதிகாரத்தை நோக்கி

மேலும் நாட்டுக்கு ஏதேனும் பெரிய ஆபத்து வந்து விடும்போது எல்லா அதிகா

ஆச்சார்ய

**வினோபா பாவே**

ரங்களும். சர்வசக்தியும் தலைமை அமைச்சருக்கு அளிக்கப்பட்டு விடுகின்றன. அவர் ஒரு சர்வாதிகாரியா

சர்வாதிகாரத்தை எல்லோரும் வெறுக்கிறார்கள்; எவரும் ஆதரிப்பதில்லை. ஆபத்து நேரும்போது தலைமை அமைச்சர் ஒரு சர்வாதிகாரியை போலவே தான் செயல்படுகிறார் அதுவும் சாதாரணமாய் இல்லாமல் ராணுவ சர்வாதிகாரமாக வேமாறிவிடுகிறது. அவரது ஆட்சி ராணுவம் போருக்குப்போய் வெற்றி வாகை சூடினால், அதற்குப் புகழ் மாலை சூட்டுகிறார்கள். அப்போது இராணுவம் இந்த விருதுகளோடு நான் திரும்பேனா? ஆட்சியைநடத்துகிறேன். என்று ஆட்சிபீடத்தில் ஏறி அமர்ந்து கொள்கிறது. இன்று ஒரு ஷேக்ஸ்பியர் இருந்தால் இந்த ஜனநாயகம் பற்றி ஓர் அழகிய நாடகமே எழுதியிருப்பார்.

## ‘உண்மையில் இன்று ஜனநாயகத்துக்கு தன்னிடமே நம்பிக்கையில்லை’

கிறார்கள்; அவர் தமது சொந்தக் கட்சியிலும்பெரும்பான்மையோராலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றார். முந்திய பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது! 48 சதவிகித வாக்குகளினாலா அல்லது 40 சதவிகித வாக்குகளினாலா என்று சரியாக எனக்கு நினைவில்லை. அவர்களுக்குள்ளும், 51 சதவிகித வாக்காலேயே பிரதமர் தேர்ந்தெடுக்கப் படுகிறார் என்றால் சிறுபான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று

கவே ஆகிவிடுகிறார். அவா வது மஹாராஜாக்கள் செய்ததைச் செய்வதாகத்தான் இருக்கிறது அரசன் தனக்கு வேண்டிய அமைச்சர்களை இஷ்டம்போல் அமைத்துக் கொள்ளவில்லையா? அதே போல்தான் பிரதமரும் அமைச்சர்களை நியமித்துக் கொள்கிறார். உண்மையில இன்று ஜனநாயகத்திற்குத் தன்னிடமே நம்பிக்கையில்லை என்றுதான் தெரிகிறது.

## வேற்றுமையிலும் நன்மை

இன்று நமக்கு நாற்புறத்திலும் இந்த ராணுவ சர்வாதிகாரமே நடைபெறுகிறது அந்நியர் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாடுகள் இராணுவம் வைத்துக்கொள்கின்றன. ஆனால் ராணுவத்திடமிருந்து அவைகளை யார் காப்பாற்றப் போகிறார்கள்? இந்தியாவின் விஷயம் வேறு. இங்கே

ஜாதி வேற்றுமைகள் இருப்பதால் எவரும் சர்வாதிகாரியாவது அவ்வளவு சுலபமல்ல சாதி வேற்றுமைகள் சர்வாதிகாரம் தோன்றுவதற்கு ஓரளவுக்கு இடையூறாக இருக்கின்றன. சாதி வேற்றுமை என்பது மிகவும் மோசமானதுதான் அதை ஒழிக்கவேண்டும் என்று கருதப்பட்டபோதிலும் அதனிடம் ஒரு நல்ல அம்சம்இருப்பதையும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். மொழி, சாதி, சமயம் ஆகியவை காரணமாக இங்கே இராணுவத்தினரிடையே போட்டி தோன்றுமாகையால் எவரும் சுலபமாக சர்வாதிகாரியாகிவிடமுடியாது”

## ஜனநாயகத்தின் குறைகளை ...

ஜனநாயகத்தில் இன்று காணப்படும் குறைபாடுகளைப் போக்கிவிடவேண்டும். அதற்குக் கட்சிகளற்றதும் மக்கள் பணியிலே கருத்துள்ளதுமான சமுதாயத்தைத் தோற்றுவிக்கவேண்டும் அத்தகையதொரு சமுதாயமிருந்தால் எல்லாக் கட்சிகளிடமும் மக்களிடமும் அதற்குச் செல்வாக்கு ஏற்படும். அதன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு எல்லோரும் நடப்பார்கள்.

சண்டைகளும், உணவு உற்பத்தியைப் பெருக்குதல், கள்ளக்கடத்தலைத்தடுத்தல், நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்துவது, சாதிஒழிப்பு ஆகிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் உதவக்கூடிய ஒரே சாதனம் கிராமதானம் என்பது என் கருத்து. ஆகையால் கிராமதானத்தின் அடிப்படையில் கிராமராஜ்யம் அமைக்கும் திவிரப்பணியில் எல்லோரும் ஈடுபடுங்கள்.

---

[வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய உறியடி உற்சவம் இன்று. இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.]

# கண்ணன் காட்டிய வழி

டி. கே. சீதாராம சாஸ்திரிகள்

படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்று ஐந்தொழிலை இறைவன் புரிகின்றார். காத்தற் கடவுள் நாராயணன் என்று வேதங்கள் போற்றுகின்றன. படைக்கப்பட்ட பொருள்கள் உயிர்கள் அவ்வவ்வினைகளுக்கு ஏற்றவாறு இன்பதுன்பங்களை நுகர்ந்து அனுபவிக்கின்றன. அந்த அனுபவங்களைப் பெற்றுய்ய உயிர்களுக்கு காத்தற் தொழிலை நாராயணன் செய்துவருகின்றார்.

இவ்வாறு காத்தல்தொழிலைப் புரிந்துவரும் பொழுது சிலகாலங்களில் அதர்மம் மேலோங்கி தர்மங்குன்றி செய்வதறியாது உயிர்கள் இடர்பட்டு துன்பத்தில் உழலுகின்றன. அப்பொழுது நாராயணன் அம்சம் பொருந்திய திரு அவதாரங்கள் நிகழ்கின்றன. அதர்மங்களையும், அதர்ம ஆட்சி பீடம் அமைத்து ஆட்சி புரியும் அரக்கரையும் அழித்து தர்மத்தைத் தாபித்து நல்லாட்சியை உயிர்களுக்கு அமைத்தருளுகின்றார் இதனையே கண்ணன் கீதையில் கூறுகின்றார்.

## ஏன் அவதரிக்கிறார்

“நல்லோரைக் காக்கவும் தீயோரை ஒழிக்கவும் அறத்தை நிலைபெறச் செய்யவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கின்றேன்.” என்பதாகும். அவ்வாறு செய்யும் ஒவ்வொரு அவதாரத்திலும் அவருடைய பெருமை உலகமெங்கும் பரவுகின்றது. அவதரித்த மூர்த்தத்தை (திருமேனியை) வைத்து அடியார்கள் வழிபட்டுவருகின்றனர். அடியார்கள் மூலம் உலகுக்கு பல அற்புத லீலைகளை நாராயணன் செய்தருளுகின்றார்.

## போற்றப்படும் இரு அவதாரங்கள்

அவருடைய திருவவதாரங்களுள் இரண்டு அவதாரங்கள் மிகமிகப்போற்றப் பட்டுவருகின்றன ஒன்று இராமாவதாரம். மற்றொன்று கிருஷ்ணவதாரம். ஏனைய

அவதாரங்கள் தெய்வீகசக்தியை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம் முதலிய திருவவதாரங்கள் தெய்வீக வலிமையுடன் கூடி அரக்கருடன் போர் புரிந்து அதர்மத்தை அழித்து தர்மத்தைத்தாபித்திருக்கின்றன. ஆனால் ராமாவதாரமும் கிருஷ்ணவதாரமும் அவ்வாறு அமையவில்லை. மக்கள் சமூகத்துடன் இணைந்து வாழ்ந்து மக்களுக்கு நீதி நெறிகளைச் செயலாலும் சொல்லாலும் எடுத்துவிளக்கி மக்களை நல்ல முறையாக வாழவைத்து தர்மத்திலீடுபடவும் செய்துள்ளன. ஆகவே இவ்விரு அவதாரமூர்த்திகளை மக்கள் சமூகம் என்றும் வழிபட்டுவருவதைக் காண்கின்றோம்.

## இராமவதாரம்

சத்தியம் காத்தல் பெரியோரைப்பணிதல் அண்டினவனுக்கு ஆறுதலளித்தல், நட்பைப்பேணுதல் முதலிய சிறந்தநற்குணங்களுடன் ஸ்ரீ இராமன்வாழ்ந்துகாட்டினான் மக்கள் சமூகத்தவர் யாவரும் இந்த நெறிகளுடன் வாழவேண்டும் என்பதே இராமாவதாரத்தின் குறிக்கோளாகும். இராமன் மக்களுடன் இணைந்துவாழ்ந்து மக்களால் போற்றப்பட்டு மக்களுள் மாணிக்கமாகவிளங்கினான். தெய்வீகத்தன்மையை தன்னுள் அடக்கியேவைத்திருந்தான். வெளிப்படுத்தவில்லை. சீதையின் பிரிவினால் இராமன் அடைந்த துயரத்தை அறியும் பொழுது சுத்தமான ஒரு மனிதன்தன் துணைவியைப் பிரிந்த பொழுது எவ்வாறு துடிப்பான் என்பதை படம்பிடித்துக் காண்பிப்பது போல அமைந்துள்ளது.

## வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்ந்து காட்டியவன் கண்ணன்

கண்ணனுடைய திருவவதாரத்தில் மக்களுடன் இணைந்து வாழ்ந்தும் பலமுறை தெய்வீகசக்தியை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கண்ணன் ஆயர்குலத்தில் வளர்ந்துவரும்பொழுது அவனுடைய தாய்மாமன் கம்சன் குழந்தையை சங்கரிக்க பூதனை என்ற அரக்கியை அனுப்பிவைக்கிறான், அவ்வரக்கியும் புறப்பட்டு வரும் பொழுது இடைவழியில் பல குழந்தைகளுக்குப்பாலூட்டி நஞ்சைப்பருக்கி அழித்துவந்தாள். முடிவில் ஆயர்குலம் அடைந்து நந்தகோபன் இல்லத்தை அடைந்தாள். கண்ணன் தொட்டிலில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அவ்வமயம் திடீரென்று விழித்தெழுந்து அழுதான். அப்பொழுது செவிலித் தாய்மார்கள் அக்குழந்தையை எடுத்துச் சமாதானம் செய்தார்கள், அப்பொழுது பூதனை என்ற அரக்கி அவர்களுக்குத் தெரிவித்தாள் குழந்தை பசித்து அழுகின்றது என்னிடம் பால்நிறைய வுண்டு’ நான் கொடுத்துப் பசியைத்தணிக்கிறேன் என்றுகூறிகுழந்தையைவாங்கிக்கொண்டாள். அக்குழந்தையும் தாயினிடம் தாவிப் பாய்வதுபோலப் பாய்ந்து சந்தோஷமாக அவள் அளிக்கும் பாலைப்பருகியது. இதுவரையிலும் சாதாரணமானிடக்குழந்தை செய்வதையே அக்குழந்தை செய்தது. ஆனால் பாலை உறிஞ்சிக் குடிக்கும்பொழுது அவளது உயிரையும் உறிஞ்சிக் குடித்துவிட்டது.

தெய்வீகவலிமையையும் காட்டியுள்ளது - மற்றொரு சமயம் சகடன் என்னும் அசுரனை கஞ்சன் அனுப்பிவைக்கின்றான். அவ்வரக்கன் பெரியவண்டி உருவமெடுத்து ஆயர்குல வீதியில் உருண்டோடி வருகின்றான். அங்கு கண்ணன் தன் தோழர்களுடன் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கின்றான். தோழர்கள் பெரிய வண்டி உருண்டுவருவதைக் கண்டு பயந்து சிதறுண்டு நாலாபக்கமும் ஓடிவிடுகின்றனர்.

(12ம் பக்கம் பார்க்க)

# நீறு பூத்த . . .

அந்த அறைக் குள்ளே ஒரே ஒரு மெழுகுவர்த்தி மட்டும் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. அதன் ஒளியிலே ஜோசெப் புரண்டு கொண்டும் துடித்துக் கொண்டிருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. உயர்ந்த கோபுரத்திலிருந்து நாதம் எழும்பும் மணியோசை அவன் செவிகளில் அலை மோதுகிறது. அந்த ஓசையில் பிறந்த உணர்ச்சிகள் அவன் உள்ளத்தை ஊடுருவி ஊர்ந்து செல்கின்றன அவன் அவஸ்தைப் படுகிறான்.

மணி ஓசை அவனுடைய நெஞ்சிலே பாரத்தையும் கண்களில் ஈரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

விக்டருக்கு தெரியப்படுத்தி அவள் வாழ்வையே குலைக்க வேண்டுமென்று அடிக்கிறான் ஜோசெப்.

அதன் மூலம் தான் என்ன லாபத்தை அடைவேன் என்பதை ஒரு கணம் சிந்தித்த போது அவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அவன் படித்தவன்.

இந்த அநாகரீகமான வழிக்கு அழைத்துச் செல்ல அவனுடைய உள்மனம் ஒருப்படவில்லை.

அவள் வாழட்டும் ... என்ற ஒரு வாழ்த்து அவன் பலவீனமான உள்ளத்திலிருந்து அவனை அறியாமல் பிறக்கிறது.

"கலியாணம் செய்து நாலு மாசமாம் ... ஐயோ பாவம்" இந்த வார்த்தைகள் அவன் செவிப் பறையில் மோதி... நெஞ்சைத் தாக்கி... அவன் துடித்து விட்டான்

"விக்டர் ... எப்ப உனக்கு சாவு வந்து சேரும் என்று ஒரு காலத்தில் கூறிய அவனுடைய அதே வாய்...

ஆண்டவரே! மேரிக்கும் விக்டருக்கும் ஒரு ஆபத்தும் ஏற்பட்க் கூடாது என்று பிரார்த்திக்கிறது மனிதாபிமானம் அவனில் விழித்திருக்கிறது.

மிகவும் கஷ்டப்பட்டு கட்டத்தை விலக்கிப்பார்த்த போது ஜோசெப்பின் தலை சுற்றியது.

இருப்பதை அவன் கண்டான்.

அந்த உறுதி அவனுடைய வாழ்க்கையிலும் பின்பற்றப் படுமா என்பதுதான் அவனுடைய பிரச்னையாக இருந்தது.

மாறிவரும் சமூக அமைப்பு... புதுப்புது நாகரீகம்... இளமை இதயம் கொண்ட அவளை என்றோ ஒருநாள் ஆகர்ஷிக்கலாம் என்று அவன் எண்ணுகிறான்.

இதன்மூலம் அவள் மறுமணத்துக்கு முன்வரலாம் அப்படி அவள் மறுமணம் செய்யும் பட்சத்தில் தன்னையே அவள் மணந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப் படுகிறான். இருவரும் சமாந்தரமாக நடக்கிறார்கள். மாதா கோவில் மணி ஓசை ஒலிக்கிறது.

ஒருகணம் பழைய நினைவுகள் இரு இதயங்களிலும் பரவுகின்றன.

அவன் தன்னை சுதாகரித்துக்கொள்கிறான்.

அவன் தன்னை உணர்கிறான்.

எங்கிருந்தோ வந்த அமைதி அவள் முகத்தில் என்றுமில்லாதவாறு தவழ்கிறது.

ஜோசெப் அவளைப் பெயர் சொல்லி அழைத்துவிட்டு கூர்ந்து அவளைப் பார்க்கிறான்.

"நீ சம்மதித்தால் ... உனக்குவாழ்வளிக்கிறேன்.."

அவனு கேகிறான்...?

ஆசாபாசங்களுக்குள் அடிமைப்பட்டுக்கொண்டிருக்கும் அவனுடைய இதயம் பேசியது!

விரக்தியான சிரிப்பு அவனுடைய கேள்விக்கு அவளிடமிருந்து பிறந்தது அந்தச் சிரிப்பின் பொருள் அவனுக்கு புரிந்துவிட்டது.

அவள் மறுமணத்திற்காக ஏங்கவில்லை ... அதை எதிர்பார்க்கவில்லை என்று அவன் உணர்ந்தபோது அவள் அவனுக்கு ஒரு புனிதமான சொரூபமாகத் தென்பட்டாள்.

திடீரமே இல்லாமல் போய்விட்டது. எப்பொழுதாவது சில பழையவர்களின் கிழடு தட்டியவைகளில்ஜோசெப்பின் பெயரும் அடிபடும்.

பல பிரச்னைகளை விமர்சிக்கும் கிழங்கட்டைகளின் பேச்சுக்களில் இப்போது ஒரு புதிய திருப்பம் ...

புதிதாக ஒரு பாதிரியார் மாதா கோவிலை நிர்வகிக்க வரப் போகிறார்.

புதிய பாதிரியாரின் வரவை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

புதிய பாதிரியார் கொஞ்சம் வசீகரமாக இருந்தார்.

அவருடைய அகன்ற முகமும் கூர்மையான கண்களும் அவருக்கு அழகாக இருந்தன.

தேவாலயத்துக்கு வருபவர்கள் அவரிடம் பாவமன்னிப்பு பெறும் போது விவரிக்க முடியாத ஒரு மன நிறைவைப் பெற்றனர்.

பாவமன்னிப்பு பெற வரும் பக்தர்களில் பாதிரியாரின் கவனத்தை வெகுவாக ஈர்த்தவன் பீற்றர் என்ற நோஞ்சான். தன்னுடைய தாய் தனக்குச்செய்யும் ஒரவஞ்சகத்தை தன்னால் பொறுக்க முடியவில்லை என்று அந்த நோஞ்சான் பீற்றர் ஒரு சமயம் பாதிரியிடம் கூறிக் கேவிக் கேவி அழுதான்.

"பிதாவே... என்னுடைய தாயே எனக்கு ஓரவஞ்சகம் செய்கிறாள். நான் பிறக்கிறதுக்கு முதல் என் தகப்பன் விபத்திலேசிக்கி' பாதிரியாருக்கு நெஞ்சை அடைக்கி

## ......மனிதன் தன்னுடைய தோல்வியை இன்னொன்றால் நீரவத்தான் துடிக்கிறன். அவன் வாழ்க்கையில் பழைய பிரச்னைகளைச் சந்திக்கும் போது மீண்டும் அவன் மனம்......

முன்பெல்லாம் இந்த மாதா கோவில் மணி ஓசையில் அவனுடைய மேரியின் குரல் சங்கமித்திருக்கும்.

மணி ஓசை கேட்டதும் மாதா கோவிலுக்கு வரும் அவளைப் பார்க்க ஓடிவிடுவான் ஜோசெப்.

மாதா கோவில் மணி ஓசை அவர்களது அன்பைப் பின்னிப் பிணைத்த காலங்கள் அழிக்க முடியாத சுவடுகளாக அவன் உள்ளத்திலே பதிந்து விட்ட காரணத்தால்தான் இன்று அவன் அவஸ்தைப் படுகிறான்:

இறந்த காலங்கள் அவன் இதயத்தை இன்று ரணகளமாக்கிவிட்டன. இன்னும் சிறிது நேரத்தில் அவனு

காதலில் ஏற்பட்ட தோல்விக்கு மரணத்தை அவன் நாடவில்லை. இழந்த மன அமைதிக்காக தன் வாழ்க்கையை இழக்கத் தயாராக இல்லை அவன் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

அந்த ஆசை விபரீதமாக இருந்தது. விநோதமாக இருந்தது. தன்னை ஏமாற்றிய மேரியை நேருக்கு நேர் சந்தித்து எதற்காக என்னை ஏமாற்றினாய் என்று அவளைக் கேட்க வேண்டும்'... அந்தக் கேள்வியினால் அவள் உள்ளத்தை வதைக்க வேண்டும். என்ற ஒரு நிலையில் வாழவே விரும்பினான்.

விக்டர் கார் ஒன்றினால் மோதப்பட்டு... பிணமாக...! மேரி அழுதுகொண்டிருக்கிறாள்.

அவன் வடித்த கண்ணீர் வற்றுமுன் அவள் கண்ணீர் வடிக்கிறாள்.

மிகவும் இளவயதிலே விதவையாகிவிட்டாள்என்று ஊர் ஒரு சிலதாபங்கள் அனுதாபத்தைஅவள்மீது சொரிந்தது. மாதாகோவில் மணி ஓசை கேட்கும்போதெல்லாம் அவனுடைய கண்கள் பனிக்கும்,

அவள் அவனுக்காக அழுவது ஓயவில்லை.

எந்த ஒரு கேள்வியை அவளிடம் அவன் கேட்கத் துடித்தானோ அந்தக் கேள்வியைக் கேட்கமுடியாத அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

0 0 0

அன்று தன்னுடைய இரண்டுவயதுக் குழந்தையோடு மேரி மாதா கோவிலுக்கு வருகிறாள். சலனமடைந்திருந்த அவள் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகைகள் மறைந்துபோய்விட்டன.

அவளைப்பார்த்த அவன் முறுவலித்தான்.

ஜோசெப் அவள் சிரிப்பாள் என்பதை எதிர்பார்த்திருந்தவன்போலக் காணப்பட்டான்,

அவள் குழந்தையுடன் நடந்தாள்,

குழந்தை அவளுடைய கையை இறுகப்பற்றியிருந்தது.

அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவனுடைய நடையிலும் தோற்றத்திலும் உறுதி

— மு. திருநாவுக்கரசு —

டைய மேரிக்கும் விக்டருக்கும் மாதா கோவிலில் திருமணம்......!

மாதாகோவில் மணி ஓசை விசேஷமாக ஒலிக்கிறது அவள் இந்த நேரம் மோதிரம் மாற்றியிருப்பாள்.

"மேரி— எதற்காக என்னை ஏமாற்றினாய்... விக்டர் எப்பதான் உனக்கு சா வரப் போகுதோ...' ஆத்திரத்தில் அவன் எதை எதையோ பேசுகிறான். ஏமாற்றம் கொண்ட நெஞ்சம் எதை எதையோ பேச வைக்கிறது. அவன் ஒரு முடிவுக்கு வருகிறான்.

மேரி தனக்கு எழுதிய கடிதங்களை விக்டரின் முகத்திலே வீசி எறிந்து அவளுடைய பத்தினித் தனத்தை

எப்படியும் ஒரு நாள் அவளை சந்திக்க வேண்டுமென்று துடித்தான்.

ஒரு நாள் ... எப்படியும் சந்திக்க வேண்டுமென்று துணிந்து விட்டான்.

அன்று அவள் மாதா கோவிலுக்கு வருவாள் என்பது அவனுக்கு தெரியும்.

மாதா கோவிலுக்கு அவன் புறப்பட்டு விட்டான்.

மாதா கோவிலை நெருங்க இன்னும் ஒரு திருப்பந்தான் இருக்கிறது.

எல்லோரும் மாதா கோவிலை நோக்கி ஓடுகிறார்கள்

அவனும் ஓடுகிறான்

ஜனக் கூட்டத்தைக் கஷ்டப்பட்டு விலக்குகிறான்

# . . . நெருப்பு

அவள் ஒரு மலராக இருக்க வேண்டும்...

எல்லாப் பூக்களுக்கும் மத்தியில் இருந்தாலும் அந்த மலர் மதிக்கப்படாத மலராக ... விளங்க வேண்டும் என்பதே அவனுடைய ஆசை!

குழந்தை அவளை கோவிலுக்குள் இழுக்கிறது.

அவள் நடக்கிறாள்.

அவன் இப்பொழுது பின் தொடரவில்லை.

அவள் எப்பொழுது அவனுக்கு கை கொடுக்கிறாளோ ...

அப்போது தான் அவன் அவளைப் பின் தொடர்வான் அவனை அவள் புரிந்து விட்டாள்.

"அவள் ஏன் என்னை ஏமாற்ற வேண்டும்— என்று அவளைப் பார்த்து கேட்கத் துடித்த கேள்வி கொஞ்சம் கொஞ்சமாக மறைகிறது.

கால ஓட்டம் அவனுடைய காதல் தோல்வியை கொஞ்சம் கொஞ்சமாக ஜீரணிக்கிறது.

இருந்தும் ... அவன் தன்னைத்தானே ஒரு தகுதியற்றவனாக நிர்ணயித்து ... வாழ்க்கையில் அமைதி பெற ஒரு நாள் யாருக்கும் சொல்லாமல் ஊரை விட்டே போய் விட்டான்.

0 0 0 0

அந்த மாதா கோவில் இப்போது முற்றிலும் மாறிவிட்டது. ஜோசெப் என்றொருவன் அந்த கோவிலைச் சேர்ந்த கிராமத்தில் ஒரு காலம் வாழ்ந்தான் என்பதற்கு சரி

றது. கண்கள் இருண்டு... கைகள் சோர்ந்து... நிலைமையை ஒருவாறு சமாளிக்கிறார்.

"என்னுடைய தகப்பன் செத்து மூன்று வருஷங்களுக்குப் பிறகு என் தாய் வேறு விவாகம் செய்து..." பாதிரியாருடைய அதிர்ச்சி அதிகரிக்கிறது.

'யாரப்பா உன்னுடைய அந்த தாய்...?' வினாடிக்கு வினாடி நெஞ்சு இடிக்க பீற்றரைக் கேட்கிறார் பாதிரியார்.

"அவள் ஒழுங்காக கோவிலுக்குக் கூட வருவதில்லை... அவளுக்குப் பெயர் மேரி'

யாரோ நெஞ்சிலே ஏறி உழக்குவது போல இருக்கிறது அவருக்கு. உலகமே இருண்டு வருவது போன்ற உணர்ச்சியே அவருக்கு ஏற்படுகிறது.

"அவள் எதற்காக என்னை ஏமாற்ற வேண்டும்?" மீண்டும் பழைய கேள்வி முளைக்கிறது. நீறுபூத்த நெருப்பு கடர்விட்டு முளாசுகிறது. ஒரு பொறி...பெரு நெருப்பாகிறது. இப்போது ஒரு புதிய கேள்வி அவருடைய நெஞ்சில் பிறக்கிறது.

'அவள் ஏன்என்னை இரண்டாவது முறையும் மறக்க வேண்டும்?' மீண்டும் ஆகாயாசம் என்ற அந்தி வானத்தின் அழகு அவரை அள்ளிக் கொள்கிறது.

"அவள் ஏன் என்னை ஏமாற்றினாள் ?" திருப்பித் திருப்பி தன் நெஞ்சைக் கேட்ட போது— பாதிரியார் பாதிரியாராக இல்லை... ஜோசெப்

(10ம் பக்கம் பார்க்க)

"நிலமே மக்களின் நிரந்தரச் செல்வம்"

எங்களிடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்கு சகல வசதிகளும் அமைந்த பல காணிகள் உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளவும் :-

இலங்காநிதி லிமிட்டெட்

284, காங்கேசன்துறை வீதி - 284, K. K. S. ROAD,

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## மாயப்பிரபஞ்சம்—(11)

# அடங்காப்பிடாரிகளான தூமகேதுகள்

வானத்திலே தோன்றும் ஜோதிகளில் பகலில் வரும் சூரியனும் இரவில் வரும் சந்திரனும் எமக்கு மிகவும் பழக்கப்பட்டவை. பகலில் சூரியனுடைய பிரகாசமான வெளிச்சம் இருப்பதால் வானத்திலிருக்கும் கிரகங்களையோ நட்சத்திரங்களையோ நாம் பார்க்கமுடிவதில்லை. சில சமயங்களில் சந்திரனைமட்டும் கூர்ந்து கவனிப்பவர்கள் ஓர் வெளி முனைபோலக் காணலாம். இரவில் தோன்றும் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் தொடர்ந்து கவனிப்போமாயின் அவற்றை அடையாளம் கண்டுகொள்ளலாம் (உதாரணமாக இந்நாட்களில் சூரியன் அஸ்தமிக்கும்போது கிழக்கில் செந்நிறமுள்ள செவ்வாயையும் அதே நேரம் உச்சியில் வியாழன் இருப்பதையும் காணலாம்) நட்சத்திரங்களோ சூரிய மண்டலத்துக்கு அப்பால் கோடானுகோடி மைல் தூரத்திலிருப்பதால் அவை வானில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெரும்பாலும் தென்படும் துருவ நட்சத்திரத்தையும், ஸப்தரிஷி மண்டலத்தையும் ஆருமீன் வெள்ளி என்ற கார்த்திகை நட்சத்திரத்தையும் சாதாரணமாக எல்லோரும் ஊனக் கண்களினால் கண்டுகொள்ளமுடியும்.

ஆகையால் கிரகங்களும் நட்சத்திரங்களும் ஒரு வகை ஒழுங்கான நியதிக்குட்பட்டு வானப் பிரதட்சணம் வருகின்றன என்லாம். ஆனால் தூமகேதுகள் எனப்படும் வால்வெள்ளிகள் இப்படியான ஒரு சட்டதிட்டங்களுக்கு உட்படாமல் திடீர் திடீரென்று வானத்தில் தரிசனமளிக்கின்றன. ஒரு குடும்பத்திலுள்ள சில பிள்ளைகள் ஒழுங்காக வேலைக்கு போய் வீடு திரும்புவதையும் சில பிள்ளைகள் அடங்காப் பிடாரிகளாய் ஊரெல்லாம் சுற்றிவிட்டுதாங்கள் நினைத்த போது வீடு திரும்புவதையும் இது ஒத்திருக்கிறது.

ஆயினும் இப்படிக் கூறுவது தவறுமிருக்கக்கூடும் ஏனெனில் இந்த மாயப் பிரபஞ்சத்தில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளும் ஏதோ ஒரு சட்டத்துக்கும் நியதிக்கும் உட்பட்டே நிகழ்ந்து வருகின்றன என்பதை வேதாந்திகள், ஞானிகள் மட்டுமல்ல எதையும் நுணுக்கமாய் ஆராய்ந்து முடிவுக்கு வரும் கருத்தறிவாளர்களான விஞ்ஞானிகளும் இப்பொழுது ஒப்புக்கொள்கிறார்கள். சூரிய சந்திரரையும் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் நாம் அடிக்கடி கவனிக்கமுடிவதால் அவற்றின் போக்கையும் வரையறுத்துக் கூறமுடிகிறது. தூமகேதுகளோ பல வருடங்களுக்கு ஒருமுறை எமக்கு தோற்றப்படுவதால் அவற்றின் போக்கையும் தன்மையையும் சரியாக அறிந்துகொள்ள எமக்கு வசதிகிடைக்கவில்லை. அத்துடன் விஞ்ஞான ஆராய்ச்சி இன்னும் வளர்ச்சியடையவில்லை. ஆகையால் தூமகேதுகள் சட்டத்துக்குட்படாதவை என்று நாம் லேசாக கூறிவிடமுடியுமா? அவற்றின் போக்கிலும் ஒருவித ஒழுங்கு இருக்கத்தான் வேண்டும் ஆனால் நாம் இன்னும் அதைச்சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை என்றுதான் சொல்லத் தோற்றுகிறது.

— சுநாதன் —

ஏனென்றால், காலத்துக்கு காலம் தோன்றும் காலநியதியுள்ள சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வால்வெள்ளிகளை விஞ்ஞானிகள் இப்பொழுது அடையாளம் கண்டு பெயர்களும் சூட்டியிருக்கிறார்கள். மூன்று வருடங்களுக்கொருமுறை தோற்றப்படும் 'என்கி' என்ற தூமகேதுவிலிருந்து எழுபத்தாறு வருடங்களுக்கொரு முறை தோன்றும் 'ஹாலி' என்ற தூமகேதுவரை இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வால்வெள்ளிகளில் சில, கிரகங்களைப் போலவே சூரியனை வலம் வருகின்றன. கிரகங்களின் பாதை ஒரே பரப்பில் இருக்கும். வால்வெள்ளிகளோ அவற்றிற்கு குறுக்கேயும் ஓடும். இவைகளின் பாதைகளின் அநேகம் சூரியனுக்கும் வருணனுக்குமுள்ள தூரத்திலும் பார்க்க இருபது மடங்கு தூரத்தில் காணப்படுகின்றன. இவை சூரிய மண்டல சஞ்சாரம் செய்வதால் சூரிய மண்டல வால்வெள்ளிகள் என்றழைக்கப்படும்.

வேறு சில வெள்ளிகள் நட்சத்திரங்களுக்கும் ஊடாக வந்து சூரியனை சமீபித்துவிட்டு மறுபடியும் மறைந்துவிடுகின்றன. இவை நட்சத்திர மண்டல வால்வெள்ளிகள் எனப்படும். சில வெள்ளிகள் ஒரு முறை தோன்றிவிட்டு மீண்டும் தோற்றாமல் ஒரேயடியாய் மறைந்துவிடுகின்றன.

வால்வெள்ளிகள் தலை (Nucleus) தலையைச் சூழ்ந்துள்ள ஒளிப்படலம் (Coma), வால் (Tail) என மூன்று அங்கங்களை உடையன. தலைப்பாகம் மிகவும் பிரகாசமாயும், சுற்றியுள்ள உறை ஒளி குறைந்தும் காணப்படும். சூரிய ஒளியினாலேதான் வால்வெள்ளிகள் பிரபை அடைகின்றன. ஆதலால் தலையின் பருமன் சூரியனைச் சமீபிக்கும்போது சிறிதாகவும் விலகிச் செல்லும்போது பெரிதாகவும் தோற்றும். வால்கள் சில நேராகவும் சில வளைந்தும், சில ஈட்டி போலவும், சில தாடிபோலவும் பல வடிவங்களில் தோன்றும். சிலவற்றின் வால்கள் சுமார் 3 கோடி மைல்களுக்கு நீண்டிருக்கும். நீண்ட வால்களில் ஜலவாயு இருப்பதாயும் வளைந்த வால்களில் ஜல இருந்தை செறிந்திருப்பதாகவும் வேறு விதமான வால்களில் சயனம், வெண்ணாகம், லவண வாயு இருப்பதாயும்

(11-ம் பக்கம் பார்க்க)

## விவசாயப் புலம்

# வெள்ளைப்பூண்டு

வெள்ளைப் பூண்டு, வெங்காயம் போன்ற பூண்டுவகையைச் சேர்ந்ததாகும். இதனை நமது உணவு வகைகளில் மசாலா சாமான்களில் ஒன்றாக உபயோகித்து வருகிறோம். இதில் சத்துப் பொருட்கள் பல இருக்கின்றன.

வெள்ளைப் பூண்டு நோய்க்கு மருந்தாகவும் அமைகிறது. சுக்குவான், இருமல், குடற்புண், காதுநோய் போன்றவைகளுக்கு சிறந்த மருந்தாக விளங்குகிறது.

### நிலம் தயாரித்தல

பூண்டு எந்த நிலத்திலும் விளையும். ஆனால் கரிசல் நிலம் போன்ற களிமண் பாங்கான பூமியில் பயிரிட்டால் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. மணற்பாங்கான நிலமே பூண்டிக்கு அதிக விளைச்சலைப்பெற ஏற்றது.

பூண்டிற்கு மிருதுவான பாத்திகள்தேவை. ஆகையால் நிலத்தை நான்கைந்து முறை உழுது, கல், கட்டிகளை அகற்றி இரண்டு முறை சமப்படுத்தவேண்டும். இதனால் பாத்திகள் மிருதுவாக அமையும்.

### உரம்

மற்றெல்லா பயிரையும் போலவே பூண்டும் நல்ல எருவிட்டால் அதிகபயன் தரும். நிலத்தைப் பண்படுத்தும்போது ஹெக்டேர் ஒன்றுக்கு 30 அல்லது 35டன் தொழுஉரம் அல்லது கம்போஸ்டு இடவேண்டும். இப்படிச் செய்தால் பயிர் எருவெடுத்து நன்கு செழிக்கும்.

எரு அல்லது கலவை உரத்தைத் தவிர, நிலத்தைப் பண்படுத்தும் போது நிலத்தின் அளவுக்கேற்ப நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாஷ் ஆகியவற்றையும் உரமாக இடவேண்டும்.

மையமான தசைநாரைச் சிதைத்துவிடக் கூடாது. இந்நாரி பூண்டுமுளைக்க உதவுகிறது.

ஒரு ஹெக்டர் விதைப்பதற்கு 50 கிலோ பருப்பு தேவைப்படும். விதைக்கு விதை 7 1/2 செண்டி மீட்டரும் வரிக்குவரி 15 செண்டி மீட்டரும் விட்டு விதைக்க வேண்டும். இதுதான் மிகவும் சிக்கனமான முறை.

### பருவம்

பூண்டை உரிய காலத்தில் விதைக்க வேண்டும். ஜூன் - செப்டம்பர் மாதங்களிலும் நவம்பர் மார்ச் மாதங்களிலும் பூண்டு பயிரிடலாம்.

### களை எடுத்தல்

பூண்டு நன்றாக வளரச் செடியின் வேருக்கு காற்றும் வெளிச்சமும் அவசியம். ஆகையால் அப்போதைக்கப்போது மண்ணை கிளறி விட்டு களையையும் அகற்ற வேண்டும். விதைத்த ஒரு மாதத்திற்குப் பின்னர் களை எடுத்து மற்றொரு முறை நைட்ரஜன் இடவேண்டும் இன்னொரு மாதம் கழித்து மற்றொரு முறை களை பிடுங்க வேண்டும்.

விதைத்த இரண்டு மாதத்திற்குப் பின்னர் பூண்டு முளைக்க தவங்கும் ஆகையால் இதன் பின்னர் நிலத்தை ஒன்றும் செய்யக் கூடாது

### நீர்ப்பாசனம்

பூண்டு விதைத்த நிலத்தில் ஈரம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். குளிர் காலத்தில் 7லிருந்து 19 நாட்களுக்கொரு முறையும்கோடை காலத்தில் 5 லிருந்து 7 நாட்களுக்கொரு முறையுமாக மொத்தம் 14- லிருந்து 16 முறை வரையில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பூண்டு முற்றினவுடன் பாசனம் செய்வதை நிறுத்தி விட வேண்டும்.

## நோய்க்கு மருந்தாகவும் உணவுக்கு மசாலாவாகவும்

### இருவகைப் பூண்டுகள்

பொதுவாக இரண்டு வகைப் பூண்டுகள் சாகுபடி செய்யப்படுகின்றன. வெள்ளை அல்லது சிகப்பு பூண்டு இதில் எதுவேண்டுமானாலும் பயிர் செய்யலாம். இவைகளில் சிகப்புப்பூண்டு அதிக காரமுள்ளது.

நோயற்ற பூண்டுகளை விதைக்காகப் பொறுக்கி எடுக்க வேண்டும். உரித்தோ அல்லது காரால் தேய்த்தோ பருப்புக்களை தனித்தனியாக்கவேண்டும். உரிக்கும் போது பருப்பினுள்ளிருக்கும் மென்

### விளைச்சல்

இலைகள் மஞ்சள் அல்லது ஆழ்ந்த பழுப்பு நிறமாக மாறியவுடன், பூண்டை நிலத்திலிருந்து கொத்தி எடுக்க வேண்டும். பூண்டைக் காயவைத்து பிறகு சேமிக்க வேண்டும். ஆகையால் சிறிது காலம் வரை நிழலில் உலர்த்த வேண்டும். பூண்டு உலர்ந்ததும் வேரை அரிந்து விட வேண்டும்.

(தகவல்: வேளாண்மை தகவற்பணி நிலயம், சென்னை.)




குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான, மறுமலர்ச்சி மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



ஆடற்கலையில் ஆர்வம் கொண்ட செல்வி; கிருஷாந்தி சேனாதிராஜா தான் இக் கலையில் பயின்ற அளவு போதாதென தமிழகத்துக்கு அனுபவம் பெற சென்றுள்ளார் இளமை சதிராடும் இவர் நடனம் ஈழத்தின் பல மேடைகளில் நடைபெற்றது. தமிழகத்திலிருந்து திரும்பியதும் இவரது நடனம் இன்னும்பல மேடைகள் காணும்.

# ஈழத்துகலையுலகில்

நின்ருரா இந்த 'டுப்பிக் கேத்'? சிவாஜியின் படத்தில் நடிக்க சான்ஸ் கேட்டாராம். அவரும் 'ஓம்' என்ருராம். இங்கு வந்து அதுபற்றி அவரே சொல்கிருர்!

சிவாஜியின் படத்தில் இவருக்கு 'சான்ஸ்' கிடைக்குமா, கிடைக்காதா என்பதுபற்றி எமக்குக் கவலையில்லை. பிச்சைக்கார கலைச்சேவை செய்து ஈழத்துக் கலைஞர்களுக்கு பெருத்த அவமானத்தை இவர் ஏற்படுத்திவருகிருர் என்பது தான் நெஞ்சை வாட்டுகிறது!

இந்தப்படத்தின் நாயகன்?

ஈழத்து தமிழ் சினிமா உலகில் நல்ல எதிர்காலமிருக்கும் ஜெயகாந்த் அடக்கமானவர்! இனியவர்; பண்பானவர்; கடவுள் பக்தியிக்கவர்; மதுவை கையால் தொடாதவர்; சிகரட் புகைக்காதவர்! இவ்வளவும் உள்ள இவரிடம் பெருமை துளியும் கிடையாது!

'பாராவலவு' என்றசினிமாப்படத்தில் நடித்திருக்கிருர்; தமிழ் நாடகங்களில் சக்கைபோடுபோட்டிருக்கிருர்; இப்போது வானொலியிலும் இவர்

## வி. எஸ். ரி. யின் 'குத்துவிளக்கு'

தானே போட்டோகிராப்பர்களை ஏற்படுத்தி சிவாஜிக்குப் பக்கத்தில் நின்று படங்களை எடுத்துக்கொண்டுவந்து படிபேறி, பத்திரிகைகளில் போட்டு இங்குள்ளவர்களையும் ஏமாற்றப்பார்க்கிருர்;

ஆனாலும் இப்படியான 'கலைஞர்'கள் வாழ்வு நீண்ட நாட்களுக்கு நீடிக்காது.

திறமையிருந்தால் நிச்சயம் ஒரு நாளைக்கு உரிய மதிப்புக் கிடைத்தே தீரும்!

குரலை அடிக்கடி கேட்க முடிகிறது! கொழும்பு வெள்ளவத்தையில் இப்போது கடமையாற்றும் இவர் எதிர்காலத்தை யாராலும் தடுத்துநிறுத்தி விடமுடியாது. ("குத்துவிளக்கு" பொங்கல் வெளியீடாக வரும் என்பதில் சந்தேகமில்லை.)

## 'திரை'க்கு சபாஷ்

தமிழ்க் கலைச் செய்திகளை மட்டும் கொண்டு சஞ்சிகை யொன்றை நடாத்துவதென்ருல், எவ்வளவு கஷ்டம் என்பதை வார்த்தையால் சொல்லிவிடமுடியாது. இந்தக் கஷ்டங்களை யெல்லாம் தாண்டி, 'திரை' என்ற சஞ்சிகை கடந்த சில மாதங்களாக வெளியிட்டுக்கொண்டிருக்கிருர்கள். இவர்களை மனம் திறந்து பாராட்டாமல் இருக்கமுடியாது!

இந்தமாதம் 'திரை'யை பார்த்தபோது, தமிழகத்திலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகை என்று எண்ணிவிட்டேன். அருமையாகச் செய்திருக்கிருர்கள்! யாழ். நியூ செஞ்சரி நிறுவனத்தினர் தான் இச்சஞ்சிகையை வெளியிடுகின்றனர். இதன் ஆசிரியர் திரு. சி. க. புனிதலிங்கன் பத்திரிகைத்துறையில் ஓரளவு அனுபவமிக்கவர். 'மக்கள் குரல்' என்ற மாதமிருமுறை பத்திரிகையை நடாத்தியிருக்கிருர். இம் மாதத் 'திரை' அட்டையில் சிவாஜி இருக்கிருர். உள்ளே 'குத்துவிளக்கி'ல் நடிக்கும் ஆனந்தன் பேட்டிதவிர மற்றெல்லாம் தமிழக சினிமாச் செய்திகளாக இருப்பது பெருங்குறை என்பதை சொல்லித்தானாக வேண்டும்! இந்தக் குறையை ஆசிரியர் இனி நிவர்த்தி செய்வாராக!

(11-ம் பக்கம் பார்க்க)

★ பாமா ராஜகோபால்

## குத்துவிளக்கு

கலைக்கடல் கலைஞர் வி. எஸ். துரைராஜாவின் "குத்துவிளக்கு' எப்போது வெளிவரும்?' என்று துடிக்கும் நமது ரசிகர்களுக்கு என்னுல் இப்போது ஓரளவு உறுதியான பதிலைச் சொல்லமுடியும்! கொழும்பில் சென்ற வாரத்தில் நான் நின்ற சமயம் 'டப்பிங்' முடியும் தருவாயிலிருந்தது. முன்னர் வெளிவந்த ஈழத்துத் தமிழ் படங்களைப்போலல்லாது தனித்துவமான மண்வாசனைவீசும் ஒரு படமாக "குத்துவிளக்கு" மிளிரும். இந்தப்படம் பற்றி இதுவரை வெளிவராத சில விசேஷ தகவல்களை "கலையரங்கம்" வாசகர்களுக்கென்று பிரத்தியேகமாகத் தெரிவிக்கிறேன்:

# இவர்களை ஒதுக்கித் தள்ளுங்கள்!

ஈழத்துக் கலைஞர்களுக்கு அவமானம்தேடித்தரும் 'போலி'கள் யாராக இருந்தாலும், அவர்களை விட்டுவைக்கக் கூடாது! ஒதுக்கித்தள்ளவேண்டும்!

குறுக்குவழியில் புகழ் சம்பாதிக்க தம்மை இந்த நாட்டுக் கலைஞர்களினதும், ரசிகர்களினதும் ஏகபோகப் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு தமிழ்நாட்டுக்குக் 'காவடி' எடுக்கும் 'நான் காந்தர்'க் கலைஞர்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும்!

தமிழக கலைஞர்களை நமது எதிரிகள் என்று சொல்லவில்லை. அவர்கள் எமது நண்பர்கள். ஆனாலும் -

எமக்கென்று ஓர் 'ஓரிஜினலிட்டி' இருக்கவேண்டும் என்பதனையே 'அடித்து அடித்து' வற்புறுத்துகிருேம்.

ஈழத்தில் தயாரான 'மஞ்சள் குங்குமம்' என்ற தமிழ் படத்தில் 'ஹீரோ'வாக நடித்த ஸ்ரீசங்கர் என்ற வைத்திலிங்கம், இலங்கையில் நடிகர் திலகம் 'சிவாஜி கணேசன்' ரசிகர் சங்கத்தின் தலைவராக பிரகடனப்படுத்திக் கொண்டு, தமிழகம் போய் சிவாஜியின் 44வது பிறந்த தின விழாவில் கலந்துகொண்டிருக்கிருர்.

ஈழத்தில் தயாரான ஒரு தமிழ்ப்படத்தில் நாயகனாக நடித்தவர் தன்னை ஈழத்தின் நடிகராக தானே 'டமாரமடிப்'பவர், இலங்கையின் சிவாஜி ரசிகர் சங்கத் தலைவராக அங்கு போய் கலந்துகொண்டிருக்கிருரென்ருல், இவரைப்பற்றி என்ன சொல்லலாம்? அங்குபோய் வந்ததையே ஒரு பெருமையாக நினைக்கும் இவருக்கு, இங்குள்ள' சிலதுகள்' சேர்ந்து சந்திரமண்டலத்தில் காலடி வைத்த 'ஆம்ஸ்ரோங்குக்கு' வரவேற்புவிழா வைப்பதுபோல் வைக்கிருர்கள்!

எல்லாம் சிவாஜியைச் சந்தித்ததற்கு! அத்துடன்

# கொழும்பு வானொலியில் நடிகமணி வைரமுத்து

"குத்துவிளக்'கின் கதாநாயகன் யார்?

கதாநாயகியின் காதலன்தான் கதாநாயகன் என்ருல் 'ஆனந்தன்' தான் 'ஹீரோ'! கதையின் முக்கிய பாத்திரமாக நின்று படத்தையே விறுவிறுப்பாக ஓட்டிச்செல்பவர் தான் 'ஹீரோ' என்ருல் 'ஜெயகாந்' என்ற வி.நமசிவாயம்தான்.

சகோதரியின் திருமணத்துக்காகசீதனம் கொடுக்க உழைக்கிருன்சோமு பாடாதபாடுபடுகிருன் அவன்! கடைசியில் சீதனப் பணத்தைச் சேர்த்துக் கொண்டு வருகிருன் சோமு பணத்தோடு வந்த அண்ணன் சோமு தங்கையின பிணத்தையே பார்க்கிருன்! கதை முடிகிறது. சோமுவாக வருபவர் தான் ஜெயகாந்த் இப்போது சொல்லுங்கள் யார்






ஈழத் திருநாட்டுக்கும், தமிழகத்துக்கும் கலைப்பாலமாகத் திகழ்ந்து, பெரும் புகழீட்டி வருபவராகிய தவில் நாதமணி, சரவேசுகர ஞான கேசரி, நாச்சிமார் கோயில் திரு கே. கணேசனின் தவிலுடன் மிருதங்கமணி திரு எம். என். செல்லத்துரையின் மிருதங்கம் ஒன்றி, ரசிகப் பெருமக்களுடைய மனங்களைக் குளிர வைத்த சம்பவத்தைத் தாவடி சைவ இளைஞர் மன்றம் அளித்த பெருமையை பாராட்டாதோர் இல்லையெனலாம்.

தாவடி சைவ இளைஞர் மன்றத்தார் கொண்டாடிய ஸ்ரீ ராம பட்டாபிஷேக விழாவின் போது "நந்தி இசை மன்ற" வித்வானும் மிருதங்க ஆசிரியருமாகிய திரு. எம். என் செல்லத்துரைக்கு "மிருதங்கமணி" என்னும் பட்டமளிப்பு வைபவத்தின் போதே. இரு மணிகளினுடைய லய வின்யாசத்தையும் கேட்டு ரசித்து மகிழ முடிந்தது.

எந்த நாட்டிலும் சரி ஊரிலும் சரி இலைமறை காயாக இருக்கும் தரமான கலைஞர்களைக் கௌரவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இம் மன்றத்தினைப் பாராட்டாத உள்ளங்களே இல்லை.

— தாவடியூர் சம்பந்தன் —

...ர்த்துகொடுத்தது.
...லாம் ஓலைக்கு நல்ல
...ம்வேண்டும்.
...தத்திறக்கும் ஒப்
...போக்கு பயனில்லை.
...கங்களுக்கும் ஒப்பனை
...வேண்டும். காதுக்
... பின்புறமும் ஒப்பனை
...யவேண்டும். முன்
...குமட்டும்ஒப்பனை செய்
... பின்னுக்கும் ஒப்பனை
...யவேண்டும்.
...வரசியிலும் பாரிக
...ழி அலங்காரமாக உடை
... அணியக்கூடாது. தோழி
... நகைகளும் போடக்
...து. இவைக் கவனத்
... கொள்ளவேண்டும்.
...திரங்கள் தன்மைக்கு
... ஒப்பனை அமையவேண்
... ஒளிக்கு அமையவே
...னை செய்யவேண்டும்.
...ப்பனைசெய்யும் அறையில்
...லையாளர்கள் எவரை
... அனுமதிக்கக்கூடாது.
...கள் வந்து அது சரி
...லை; இதுசரியில்லை; என்று
...சொல்வார்கள். இத
... ஒப்பனையாளருக்குமனத்
...தி ஏற்படாததோடு
...ஞ்சலும் ஏற்படும்.
...ழுத்தாளர்களின் எண்
...களை பிரதிபலிக்கக்
...வகையில் நடிப்பு
...சி அமைப்பு, ஒலி, ஒளி
...ப்புகள் இருக்கவேண்
... நாடகத்தின் கரு சமு
...ற்கு நன்மை பயக்கக்
...தாக இருக்கவேண்
... குறிப்பிட்ட நேரத்
...ல் நாடகம் முடிவடை
... என்பதை இயக்குவர்
...திருக்கவேண்டும்.
...சங்கள்: நாடகங்களுக்கு
... நாட்டில் பஞ்சமில்லை.
...நாடகங்கள் அச்சேறி
...ின்றன. 1 மணித்தி
...த்தில் நாடகம் எழுதக்
...டுக்கக் கூடிய திறமை
...ல் எழுத்தாளர் மத்தி
...இருக்கிறார்கள்.
...ு. கிருஷ்ணமூர்த்தி:
... தயாரிப்பாளர்கள்
(10-ம் பக்கம் பார்க்க)

...லை நான் காண ...
...ல.
...க்குத்தர் கண்டிக்கப்பன்
...ல் இரண்டொருவரைப்
...சோதித்துக்கொண்டு
...ார். நான் செய்தியைச்
...ன்னதுமே அவர் என்
...கூர்ந்துபார்த்தார். அத்
...பார்வை என்ன சொல்
...ு என்று எனக்குப்புரிய
...ல.
...பெரியம்மா என்ன செய்
..."
...படுத்திருக்கிறு".
...ளைச்சாப்பாடு சாப்
...ட்டவா?"
...தெரியாது. சாப்பிட
...மலிருக்காம்".




...யாளிக்கு ஏதோ
...ந்தகளை எழுதிக்
...டுத்துவிட்டுடாக்குத்தர்
...டும் என்னைப் பார்த்
...

...சத்தி, செல்வதி எங்
... இருக்கினமா?"
...இல்லை. கொஞ்சம் முந்தி
...யபோ வெளிக்கிட்டுப்
...ட்டினம்"
... பெரியையா என்ன
...யிறார்?"
...அவர் உங்கை இல்லை.
...க்குப் போட்டார்.
...!"
...ளே வந்து நின்ற ஒரு
...ாளியை நிமிர்ந்து
...துவிட்டு, டாக்குத்தர்
...ிடம் சொன்னார்.
...ப்ப கொஞ்ச வேலை
...ு. பின்னேரம் போலை

# அற்புத புராண வரலாறு தரும் வல்லிபுரம்

வல்லிபுரக்கோவில் பருத்தித்துறையிலிருந்து மருதங்கேணி செல்லும் நெடுஞ்சாலையில் மூன்றுகல் தொலைவில் அமைதிநிறைந்த மணல் வெளியில் அமைந்திருக்கிறது. திருக்கோயில் இல்லாத திருவில்லூர் அடவி காடே என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாறு பெருமாள் கோவில்கள் குடாநாட்டில் மல்வில் என்ற இடத்திலும் (பளைப் பகுதியில்). பொன்னாலையிலும், வண்ணார்பண்ணையிலும் அமைந்திருப்பதை யாவருமறிவர். இவ்வாறு திருமால் ஸ்தலங்கள் தமிழ்நாட்டில் எங்கும் நிறைந்திருக்கின்றன. அங்கு வைணவர்களும் பெருந்தொகையாக வாழ்கிறார்கள். எனினும் ஈழத்தில் சைவப் பெரும்குடி மக்கள் வேதகளால் இடப்படும். விபூதி சைவசின்னமாக அணியப்படும். நாமம் சைவ வழக்கப்படி பொட்டாகவே இடப்படும். ஆயின் வைணவர்களோ வடகலை, தென்கலையென்ற பிரிவுகட்கமைய நாமம் தரிப்பர் அவ்வழக்கமும் கட்டுப்பாடும் ஈழத்தில் இல்லை. மோகினி வடிவான திருமால் ஒருபோது சிவனின் சக்தியான கதை சிவவிஷ்ணு என்பதற்குச் சான்றாகும்.

புராணங்களில்

"அன்னமற் குறையாத

## எங்கள் கிராமம்- 17

காலத்தையும் விஞ்ஞான காலத்தையும் இணைத்த ஒருமைப்பாடான ஆத்மீக நெறியில் நிற்பவர்களென்பதற்கு அவர்களது சமரச சன்மார்க்கமே உரைகல்லாகும். அண்மையில் ...மரரான ஸ்ரீலஸ்ரீ (அச்சுவேலி) குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் வல்லிபுரத்தில் உள்ள விஷ்ணு சைவவிஷ்ணு ஆனபடியால்தான் சைவர்களின் வணக்கத்துக்குரிய தெய்வக் கோலம் அங்கே இருக்கிறதென, வல்லிபுர உபாத்தியாயர் அவர்களுக்கு ஒரு முறை விளக்கம் கூறினார்கள். அக்கோவிலில் விஷ்ணு ஆலயக் கிரியைகளும் வழிபாடுகளும், சைவ ஆகம அமைப்பும் கலந்து இருக்கக் காணலாம். சந்தனத் திருக்குப்பதினாக நாமமே பக்தர் இல்லாமற் பிறவாது" என்பார்கள். அதுபோல வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம்பற்றித் தட்சிணகைலாய மான்மியமும், கர்ணபரம்பரைக் கதையும் கோவிலின் வரலாற்றை நமக்குத் தெரிவிக்கின்றன. தட்சிணகைலாய மான்மியம் என்னும் நூலிற் காணப்படும் வரலாறு வருமாறு:

முற்காலத்தில் தேவர்கள் இரணியன் என்னும் அசுரனாற் பெரிதும் வருத்தப்பட்டார்கள். தேவர்கள் பாதுகாப்புக்காகத் ...திருந்த சங்கை கூட்டங்களை இரணியனது தூதர்கள் கடலில் எறிந்தார்கள். தேவர்கள் வருந்தி விஷ்ணுவிடம்முறையிட்டார்கள். அவர் மீன் உருவாகிச் சங்குகளைக் எடுத்துக் கரையில் வைத்தார். பின்பு ஒருநாள் வல்லிபுரத்துக்கண்மையில் உள்ள கடலில் பரதவர் வலையிற் புகுந்து பெரிய கோலாகலத் தொனி செய்தார். இத்தொனியைக் கேட்டு அயலிலுள்ள கிராம மக்கள் பெருந்திரளாகக் கூடினர். வலைஞரும் கோபமுடையவர்களாகி மிக்ககஷ்டப்பட்டு அம்மீனைப்பிடித்தனர். அம்மீன் அவ்விடத்திலே வலஞ்செய்துகொண்டிருந்தலவல்லி என்னும் கன்னியின் மடியிற்போய்விழ்ந்தது. சனங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மீன் நீலநிறத்தோடும், துளசிமாலையோடும் கூடிய குழந்தையானது அக்குழந்தை ஆலிலைப் பாலகனாய் அன்றமுதம் உண்டு காலின் மணி கரையொலிக்கும் கண்ணபுரத்துக் கண்மணியே என்றறிந்து ஆனந்த பரவசமாகி எல்லோரும் வணங்கினார்கள் அவ்வளவில் அக்குழந்தை மச்சாவதாரமாகி கடலுள் மறைந்தது அடியார்களின் பிரார்த்தனைக்கிரங்கியபகவானும் ஒரு கிழப்பிராமண வேடந் தாங்கி அவ்விடத்தில் சக்கர பாணியாகத் தோன்றினார் ஆழியான் தன் ஆழியை அங்கிருந்தோரிடம் கொடுத்து இச்சக்கராயுதத்தை வைத்துப் பூசியுங்கள் என்று கூறி மறைந்தருளினார் அச்சக்கராயுதத்தை வைத்து பிரதிஷ்டை செய்த இடமே இவ்வாலயமாகும் வைஷ்ணவ ஆலயங்களிலெல்லாம் தெய்வத் திருவுருவங்கள் மூலமூர்த்தியாய் அமைந்திருக்க வல்லிபுரத்தில் மட்டும் சக்கரம் வணக்கத்துக்குரியதாய் பிரதிஷ்டைசெய்திருப்பதைக் கல்கி ஆசிரியர் திரு ஆர் கிருஷ்ணமூர்த்தியவர்களே போற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

### மற்றொரு கதை

இதைவிட அவ்வூரவர்களால் பரம்பரை பரம்பரையாகவழங்கும் கதையும் உண்டு. இப்போதுகூட மிதிரத்துமாடும் வங்கக்கடலில் மீனவர்வலைவீசும்போது அழகான குழந்தைபோன்ற திருவிளையாடல்களை வலபுரிந்தது. பரதவரின் வலைகளை அறுத்தும் நாவாய்களை மறித்தும் மறைந்தும் ஓடியும் ஆடியும் விளையாடியது. அக்குழந்தையைப் பிடிப்பதற்கு அவர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் வியர்த்தமா

(10-ம் பக்கம் பார்க்க)

மு. வே. வல்லிபுரநாதன்

வாறன் எண்டு சொல்லு. இடையில தேவையெண்டா இதில ஒரு குளிகையைப் போடச் சொல்லு"

அவர் கொடுத்ததை வாங்கிக்கொண்டு திரும்பினேன். பெரியம்மாவிடம் இதைச் சொல்ல நான் மேலேசென்ற போது. உடைகளை மாற்றிக்கொண்டு அவள் மேலும் ஒய்யாரமாகப் படுத்திருந்தாள்.

கீழேஇறங்கி முன்புறத்து மண்டபத்துச் சுவர்களைத் துடைப்பதில் முனைந்தேன்.

இரவு எட்டுமணிக்கு நான் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோதும், மாலையில் மருந்துப்பெட்டியோடுவந்திறங்கிய டாக்குத்தர் மேலே தான் இருந்தார்.

வழக்கத்துக்கு விரோதமாக, சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போன். "சின்னம்மாக்கள் எப்ப வருவினம்?" என்று சிவகாமியிடம் கேட்டேன்.

"நாளைக்குத்தான் வருவினம். சாப்பாடு தங்களுக்கு வேண்டாம் எண்டு போகமுந்திச் சொன்னவை".

"ஓ!"

முன்பு சில இடங்களிலும், இன்று டாக்குத்தரின் வாயிலிருந்தும் நான் கேட்ட இந்த 'ஓ', என்னை அறியாமலே என்னோடு ஒட்டிக்கொண்டதைக் கண்டு எனக்கே என்னில் சிரிப்புவருகிறது. இந்த 'ஓ', ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னுள் அடக்கி வருகிற அர்த்தங்கள்!

ஓ, டாக்குத்தர் இன்னும் போகவில்லை.

நான் என் அறையினுள் நுழைந்து, சிறிதுநேரம் ஒய்வெடுக்க, கட்டிலில் உட்கார்ந்தேன். என் மனம் எனக்கே தெரியாமல் இசைக்க ஆரம்பித்தது:

"பால் நினைந்தூட்டுந் தாயினுஞ்சால..."

ஒன்பது மணிக்கு மேல் டாக்குத்தர் படிகளில் இறங்கி வருகிற அரவங்கேட்டது. கைப்பையை அவரேசுமந்து கொண்டுவந்தார். அதை வாங்கிக்கொண்டு போய்க் கொடுப்பதற்காக, படிகளின் கீழ் நிரைகளுக்குச் சென்று கைநீட்டினேன்.

"வேண்டாம். நானே கொண்டுபோகிறேன். பெரியம்மாவுக்குச் சாப்பாடு வேண்டாம். யாரும் போய் நித்திரையைக் குழப்பவுங் கூடாது" என்று படித்தவர்களின் தமிழில் கூறிய டாக்குத்தர். ஒடுக்கமான படிக்கட்டாதலின், என்னோடு ஓரளவு உராய்ந்து கொண்டே சென்றார்.


"ஓ!"

என்னையும் மீறிப் பிறந்த இந்த 'ஓ', தனக்கு நான் தந்த பதில் என்று டாக்குத்தர் எண்ணியிருப்பார் ஆனால், அது அவர் என்னோடு உராய்ந்து கொண்டு செல்கையில் என் மூக்கைத் துளைத்த அந்த 'செண்ட்' இனதும் மயிர்க்காலகத்தாவிடம் அவ் வீசிய நெடியினதும் கலவையை நான் இனங்கண்டுகொண்டேன் என்ற எண்ணத்தில் என்னுள்ளிருந்து தானாகவே பிறந்தது என்பதை அவர் அறியமாட்டார்.

வாயிற்கதவைப் பூட்டிவிட்டு, விளக்குகளை அணைத்துவிட்டு நான் கட்டிலில்சரிந்தபோது ஆயிரமாயிரம் கற்பனைகளும், எண்ணங்களும் என் தூக்கத்தைக் கெடுக்க என் முன்னால் வந்து குவியத் தொடங்கின.

(தொடரும்)

## ஆச்சரியப்படுகிறீர்களா?




இவ்வழகி சிறிப்பாயும் இவ்விராட்சத மிருகத்தின் முன் பயமின்றி நிற்கிறாளே என ஆச்சரியப்படுகிறீர்களா? ஆச்சரியப்படாதீர்கள் இவள் பயமின்றி நிற்பதற்குக் காரணம் இந்த மிருகம் தன்னியக்கப் பூட்டுக்களாலும் இணைப்புக்களாலும் அமைக்கப்பட்டிருக்கிறது

உலகத்திலேயே மிகஉயர்ரகமான இந்தப் பூட்டுக்களையும் இணைப்புக்களையும் போர்த்க்ளீவ்லண்ட் பாஸ்ட்னிங்ஸ் என்ற வேல்ஸ் நாட்டுக் கம்பனி உற்பத்தி செய்கிறது.

## அக்கா! அக்கா!!

— மேலைப் புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி —

அக்கா அக்கா அழகக்கா
அவனி தந்த சுகம் அக்கா
உயிரார் அக்கா உன்மடியில்
உறங்கப் போறேன் தாலாட்டு.
— அக்கா

அக்கா என்னை மடி இருத்தி
மனமாய்ப் பாடம் சொல்வாயே!
இக்காலத்தின் சிறுமையிலே
சிறந்த வழியும் வகுப்பாயே!
— அக்கா

அம்மா அப்பா அனைத்தும்நீ
அறியும் தெய்வம் எல்லாம்நீ
சும்மா இல்லை உறவெல்லாம்
சூழவைத்த செல்வம்நீ
— அக்கா

பாட்டுப் பாடிக் காட்டுவாய்
பழைய கதைகள் சொல்லுவாய்
ஆட்டம் காட்டி அபிநயமும்
அழகாய்ச் சொல்லித் தருவாயே!
— அக்கா

பாலும் சோறும் ஊட்டுவாய்
பழமும் சேர்த்து நீட்டுவாய்
நாலும் இரண்டும் சொல்லியே
நல்ல தமிழும் கூட்டுவாய்!
— அக்கா

## குழந்தைகளே உங்கள் கை வண்ணத்தைக் காட்டுங்கள்!

('ஷங்கர்ஸ் வீக்லி' நடத்தும் அனைத்துலகச் சித்திரப் போட்டியில் நீங்களும் கலந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.)

'ஷங்கர்ஸ் வீக்லி' நடத்தும் தேசிய குழந்தைகள் சித்திரப் போட்டி இந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற விருக்கிறது. இப்போட்டியில் அனைத்துலகத்திலிருந்தும் 1956ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதிக்குப் பின்னர் பிறந்த எல்லாக் குழந்தைகளும் பங்கு பற்றலாம். கடந்த ஆண்டுகளில் இலங்கைக் குழந்தைகள் இப்போட்டியில் பங்குகொண்டு பரிசும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஷங்கர்ஸ் வீக்லி' குழந்தைகள் சித்திரப் போட்டி 1968-ம் ஆண்டு தொடக்கம் வருடந் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 100-க்கும் அதிகமான நாடுகள் பங்குபற்றியுள்ளன.

கட்டுரை, கவிதை, சிறுகதை முதலிய எழுத்துப் போட்டியும் இச் சித்திரப் போட்டியில் ஓர் அங்கமாகும்.

சிறந்த சித்திரம் அல்லது ஓவியத்துக்கு இந்திய ஜனாதிபதி தங்கப் பதக்கமும், சிறந்த எழுத்து வேலைக்கு உப ஜனாதிபதி தங்கப் பதக்கமும் மற்றும் 24 சிறந்த ஆக்கங்களுக்கு நேரு ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்படும்.

போட்டிக்குத் தாம் விரும்பிய எந்தப் பொருளையும் குழந்தைகள் தேர்ந்தெடுக்கலாம்.


சித்திரம் அல்லது ஓவியம் பென்சிலால் வரையக் கூடாது. அளவு 12'' X 16'' ஆக இருக்க வேண்டும். 6 படங்கள்வரை ஒருவர் போட்டிக்கு அனுப்பலாம். எழுத்து வேலைகள் ஆங்கிலத்தில் மட்டும் இருக்க வேண்டும்.

போட்டி சம்பந்தமான முழு விபரங்கள் அடங்கிய கைநூலொன்றை 'ஷங்கர்ஸ் வீக்லி' வெளியிட்டிருக்கிறது.

போட்டிப் படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:-

SHANKAR'S INTERNATIONAL CHILDREN'S COMPETITON, NEHRU HOUSE, 4, BAHADUR SHAHZAFAR MARG, NEWDELHI-1 (INDIA)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்
போன்: 330



மாணவர்களுக்கு விவசாயம், கைத்தொழில்

# நாடு செழிக்க- நாம் மகிழ்வுற ...

— செ. அ. தமிழழகன்

விவசாயம் மக்களை வாழ்விக்க வந்த வரப்பிரசாதமாகும். இதனை நாம் இழிவாகக் கருதுவது எமது மடமையேயாகும். நாடு செழிக்க நாம் மகிழ்ச்சியுடன் வாழவேண்டின் விவசாயத்தைப் பெருக்கவேண்டும்.

### மூவகைப் பயிர்ச்செய்கை

விவசாயத்தில் பெரும் போகப் பயிர்ச்செய்கை, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, சிறுபோகப் பயிர்ச்செய்கை என மூவகையாக பிரிக்கப்பட்டுள்ளது. பெரும்போகப்பயிர்ச் செய்கை என்பது நெல், கோதுமை ஆகியவற்றின் பயிர்ச்செய்கைகளைக் குறிக்கும். இலங்கையில் பெரும்பாலும் இங்குள்ள சுவாத்தியத்திற்கேற்ப நெல்மட்டுமே பயிர் செய்யப்படுகிறது. அமெரிக்கா போன்ற குளிர்ப்பிரதேசங்களில் கோதுமை பயிர் செய்யப்படுகின்றது.

### நெற்செய்கை

இலங்கையரின் பிரதான உணவு நெல்லரிசிச்சோறு என்பதனால், இங்கு அறுவடை செய்யும் நெல் போதாமலிருக்கின்றது. இதனால் அரிசி பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. பிறநாடுகள் இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்யாது விட்டால் இலங்கை மக்களின் பாடு திண்டாட்டமாகிவிடும். எனவேதான் அரசாங்கமும், மக்களும் விவசாயத்தில் கூடிய அக்கறை காட்டவேண்டுமென எல்லோரும் விரும்புகின்றனர். எமக்குத் தேவையான அளவு நெல்லை நாமே உற்பத்தி செய்துகொண்டு விட்டால் பிறநாடுகளிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலை எங்களுக்கு ஏற்படாது.

### இயற்கை அளித்த சுவாத்தியம்

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்பது தென்னை; தேயிலை றப்பர் ஆகியனவாகும். இலங்கையில் இவைகள் பெருந்தொகையாகப் பயிர் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்பயிர்ச் செய்கைகளை உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் இலங்கை பெரும் ஆதாயத்தைப் பெறுகின்றது. இந்த ஆதாயத்தில் இலங்கை மக்களுக்கு வேண்டிய உப உணவுப் பொருட்களையும் மற்றைய பொருட்களையும் பண்டமாற்றாகவோ, விலைக்கோ இலங்கை அரசாங்கம் வாங்குகிறது. இப்பயிர்ச் செய்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதனால் நமது நாடு செல்வம் செழிக்கும் நாடாக விளங்கும் என்பது நிச்சயம்.




### கைத்தொழில் பயிற்சி வேண்டும்

தென்னந்தும்பாலும், றப்பர்களும் பெருமளவு பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அவற்றிலிருந்து உருவாக்கப்படும் பொருட்களை இரட்டிப்பான விலைக்கு நாம் வாங்குகிறோம். இந்த நிலை இலங்கை மக்களுக்கு ஏன் ஏற்பட்டது? இவற்றிலிருந்து தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய இங்குள்ள மக்களுக்கு பயிற்சி இல்லை. அத்துடன் அதற்குரிய தொழிற்சாலைகளோ உபகரணங்களோ இல்லை. போதியளவு தொழிற்சாலைகளை நிறுவி மக்களுக்கு இக்கைத்தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டால் இப்பொருட்களை இறக்குமதி செய்யும் அந்நியசெலாவணியை மிச்சப்படுத்துவதுடன் இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் உதவியாக இருக்கும். மக்களுக்கு நல்ல ஊக்கமளிப்பதன்மூலம் இங்குள்ள தேவைகளுக்கு எஞ்சியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் அல்லவா? சிரமப்பட்டாயினும் அரசாங்கம் இதில் ஈடுபட்டு முயற்சித்தால் நிச்சயம் வெற்றிகிடைக்கும்.

இயற்கை அன்னை இப்பயிர்ச் செய்கைகளை பெருமளவு விருத்தி செய்ய உதவுகிறாள். நாங்கள்தான் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தாதிருக்கின்றோம்.

### சிறுதானியங்கள்

சிறுபோகப் பயிர்ச்செய்கை என்பது பயறு, உழுந்து, எள், கடலை போன்ற சிறுதானியங்களை பயிர்செய்வதாகும். இப்பயிர்ச்செய்கைகளுக்கும் வேண்டிய யந்திரங்களையும், மற்றும் தேவையான உதவிகளையும் அரசாங்கம் விவசாயிகளுக்கு அளிக்குமானால் பிரமிக்கத்தக்க அளவு விளைச்சலை நாம் பெறமுடியும்.

### ஓரேவழி

நம் நாட்டிலுள்ள பெருங்குறைபாடு என்னவென்றால் இவைகளைத் தொழிலாகக் கொள்வது அவமானம் என மக்கள் கருதுகிறார்கள். இதைப் போக்கவேண்டும். இத்தொழில்களிலே மக்களுக்கு நல்லபயிற்சி அளிக்கப்படவேண்டும். அதற்கு ஓரேவழி கல்விமூலம் எதிர்காலப் பிரஜைகளாகிய மாணவர்களுக்குவிவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் நல்ல பயிற்சி அளித்து, மாணவர்களை ஊக்குவிப்பதாகும். இதை அரசாங்கம்தான்முன்னின்று செய்ய முடியும்.

## எக்காலத்திற்கு?

ஆழ அறிவுடன்
அரியென ஏறுப்
வேழ மாமத
வீறினை வளர்த்து
தோழமை கொண்டு
துணிந்து நின்று
ஈழ நாட்டினை
இன்புறப் பெற்றுக்

செல்வங் குவிப்போர்
சிறிய பண்பராய்
எல்லாம் பகிர்ந்தும்
வழிதவிப் பாரே
வல்ல சாதிரர்
வளமுற் றதனுக்
அல்லவர் தம்மையும்
அணைத்துவப் பாரே.

"நல்லூரான்
வெற்றிவேலன்"



ஆசிரியர்: முகலாயப் பேரரசை அக்பர் நிறுவிய காலம் எது?

மாணவன்: இறந்தகாலம்.

ஆசிரியர்: ......?......?... ...?

அனுப்பியவர்,
வி. ருத்திரகுமாரன்.

# இலங்கை இந்தியா இஸ்ரேல் - இங்கு ஆண்கள் இல்லையா?

சிவனின்றி சக்தியில்லை. சக்தியின்றி சிவனில்லை என்பது ஆன்றோர் வாக்கு. திரு விமலன் அவர்கள் கூறுவதைப் போல் ஒரு பெண்ணிடம் ஆணுக்குரிய முழு அம்சங்களையும் காண முடியாது தான். ஏன், அவள் பெண் என்பதால். அதேபோல் பெண்ணிடம் உள்ள பொறுமை சகிப்புத்தன்மை அடக்கம் வலிமை இவற்றையும் ஆணிடம் காண முடியவில்லையே! அது ஏன்? அவன் ஆணாக இருப்பதனால்.

## இழுக்காகப் பட்டால்...

ஆண் என்னும் சொல்லுக்கு கருத்து ஆளப் பிறந்தவன் என்றால் ஏன் பெண்களை நாட்டை ஆள இந்த ஆண்கள் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் ஸ்ரீமாவோ. இந்தியாவில் இந்திரா, இஸ்ரேலில் கோல்டா மெயர். இந்த நாடுகளில் ஆண்கள் இல்லையா? அப்படி ஆண்கள் இருந்தால் அவர்களுக்கு நாட்டை ஆள வலிமை இல்லையா? இதில் எது சரி. இது இழுக்காக ஆணுக்குப் பட்டால் அவர்கள் ஏன் போட்டியிட்டு இப்பெண்களை ஜெயிக்கமுடியாதிருக்கிறார்கள் பெண்களின் நிழலில் தானே சிறு பிள்ளைகளாக இழுக்கும்போது ஆண்கள் மடிகின்றார்கள். ஒரு பெண்ணின் நிழலில் இருப்பது இழுக்கு, அவமானம் அழகல்ல என்றெல்லாம் ஓர் ஆண் எண்ணுவானேயானால் அவன் தாய், சகோதரி, மனைவி, பிள்ளைகள் ஒருவரும் இல்லாத ஓர் அநாதையாக இருக்கவேண்டும். அல்லது பெண்களை ஏதோ ஒரு காரணத்திற்காக வெறுப்பவனாக இருக்கவேண்டும். அதுவுமல்லாவிடில் ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்டவனாக இருக்கவேண்டும்! இதில் திரு விமலன் அவர்கள் எந்த இடத்தைக் கொண்டவரோ யான் அறியேன்.

திருமதி. பி. இராமநாதன்

பெண்கள் ஆணுக்கு முட்டுக்கட்டையாகவா இருக்கிறார்கள் என்று கூறுகிலரோ. இராமனது பெருமை, புகழ் பாரெல்லாம் ஓங்க சீதையல்லவா காரணமாக இருந்தார். அதேபோல் கோவலனின் புகழ் ஓங்க யார் காரணமாக இருந்தவர். கண்ணகி அல்லவா? அக்காலத்தில் வாழ்ந்தகொடை வள்ளல்களின் பெயர் புகழுடைய பாடியவரும் ஒரு பெண் அல்லவா? குசேலரோடு கஷ்டஜீவனம் நடத்திய சுசீலையால் குசேலர் புகழ் அடையவில்லையா? பெண்களின் வீரதீர நாட்டை பகைவர்களிடமிருந்து காப்பாற்றக் கூடிய திறமையிருந்ததென்று என்பதை இவர் படிக்கவில்லையா? திரு. விமலன் பெண்கள் முட்டுக்கட்டையானவர்கள் என்ற கண் கொண்டு நோக்குகின்றார். பெண் இல்லாது ஆண் ஒரு போதும் முழுமை பெறமுடியாது. அப்படி முழுமை பெற்றதாக இதுவரை எவரும் சொன்னதும் கிடையாது.

இன்றைய காலகட்டத்திலே வர்கள் தாம் உழைக்கும் உழைப்பின் பாதியை மதுவுக்கும், மிகுதியில் அரைவாசியை சீரம் மற்றும் செலவுகளுக்கும் போக எஞ்சியதையே வீட்டுக்காரிக்குக் கொடுப்பது வழக்கமாகியுள்ளது. அப்படிப்பட்ட தலைவர்கள் உழைத்து குடும்பம் முன்னேற்றமடைவதிலும் தொல்லைகளே பெருகுகின்றன இப்படிப்பட்ட தலைவர்களுடன் சேரும் பெண்கள் எவ்வாறு தமது குடும்பத்தை சந்தோஷமாகக் கொண்டுசெல்ல முடியும்.

## ஆண் உலகம் மாறும்போது..

ஆண் எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஆற்றல் உடையவன் தான். ஆனால் பெண் உலகம் என்றும் ஏற்றுக்கொள்ளும். ஆதேவேளையில் அவன் கோழையாக மாறி சீதனம் எனும் பேயைத் தேடி அலைந்து கொழுத்த சீதனத்திற்கு பெண்தேடும் படலத்திற்கு வரும்போது தான் எமது தலைவர் எப்படிப்பட்டவர் என்பது புலப்படுகின்றது. அன்றைய தலைவன் சீதனத்தைத் தேடவில்லையே அதே போல் அன்றைய தலைவியும் தொழில்துறைக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் ஆண் உலகம் மாறும்போது பெண்களும் மாற வேண்டியது அவசியமல்லவா?

# அதிகாரமா ...? அன்பா .....?

கடந்த வாரம் குடும்பச் சுடரில் வெளியான ஆண் பிள்ளையானாலும் எனும் கட்டுரையை படித்தேன். ஆண்

கருத்தரங்கு

பிள்ளையானாலும் ஆண் பிள்ளை ஆண் பிள்ளைதான். ஆனால் தனது அடக்குமுறை, அசட்டுக் கௌரவம், முரட்டுப்பிடிவாதம், ஆணவத்தின் மூலம் மென்மைக்கு இருப்பிடமான பெண்ணைத் தன்புறத்த வேண்டியதில்லையே!

## நிழல்

பெண் தகிக்கும் நிழலாக ஆடவனைக் களித்த விமலனுக்கு அந்த நிழலில் பெண்ணைக் குளிர்ச்சியாகவும், மனதிற்கு இதமாக வைத்திருக்கும் அன்புக் கணவனாக இருக்க வேண்டும். என்று தான் கூற விரும்புகிறேன். ஆண், பெண்ணினுடைய நிழலிலே எங்கு மடிந்தான். பெண்ணின் கருணை, இரக்கம், அன்பு தியாகம், தயாள குணத்தினால் எத்தனை குடும்பங்கள் அமைதியாக இருக்கின்றன.

## முட்டுக்கட்டையின் பொருள்

நாட்டின் இரு கண்களுள் ஒன்றாகப் பாரதி போற்றும் பெண் எங்கு முட்டுக் கட்டையாக இருந்திருக்கிறாள். தேர் தன் பாதையில் இருந்து விலகிச் செல்லாது அல்லது கண்டபடி உருளாது. தடுப்பதற்காக உபயோகிக்கும் முட்டுக் கட்டையைத் தான் கருதி விட்டாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

## கணவனை வணங்கி கடவுளை வணங்க மறுக்கும்.

சீதை இராமனுடன் காடு சென்றது குற்றமா? கட்டிய கணவனை காட்டில் தவிக்க விட்டு அரச போகத்தை அனுபவிக்க எந்த ஒரு பெண்ணும் விரும்புவாளா? கணவனை வணங்கி கடவுளை வணங்க மறுக்கும் பெண்கள் நம்தமிழ்ப் பெண்கள் இதனைத் தவறாகக்கருதி இராம - இராவண யுத்தத்துக்கு காலானவள் என்று ஒரு பெண் மீது பழி சுமத்துவது நியாயமா?

## கடமை உணர்ச்சி

பெண்ணுக்கு கடமை உணர்ச்சி ஏன் இல்லை, எங்கு இல்லை. கணவன் நோய் வாய்ப்பட்டிருக்கும் எத்தனையோ குடும்பங்களில் பெண் வீட்டு வேலைகளையும் செய்து அலுவலகம் சென்று உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள்

" நிமலி "

சத்தியவானின் தந்தையின் இழந்த அரசைக் மீட்டுக் கொடுத்தது யார்? ஆயுள் குறைந்த சத்தியவானை மணந்து அவனின் உயிரைக் கவர்ந்து சென்ற இயமன் பின்னே சென்று உயிரை மீட்டது சாவித்திரி இல்லையா? வீணே பெண்ணை பழி சொல்லாது அன்புடன் நடத்தினால் இல்லறத்தில் அன்பு நிலவாதா? அன்பினால் அன்றி அதிகாரத்தால் எந்தப் பெண்ணையும் பணிய வைத்திட முடியாது.

பெண்ணுக்குச் சுதந்திரம் கல்வி ஆகியவற்றுக்கு வித்திட்ட பாரதியார் இறந்ததுடன் பெண் கல்வி, பெண்ணின் சுதந்திரமும் இறந்து விடவா வேண்டும். பொறுமையே உருவான பெண்ணின் பொறுமையைச் சோதிக்காது ஆண்கள் இருப்பின் பெண் மென்மையாக அன்பே உருவாக அவர்கள் நல்லது சொன்னால் அதைக் கேட்டு நடப்பவளாக மறுக்கமாட்டாள்.

# மாணவிகளுக்கு போட்டி எங்கு ஏற்படவேண்டும்?

மாணவிகள் கவர்ச்சி ஆடையைக் கனவில்கூட நினைக்கக்கூடாது. கவர்ச்சி ஆடைகள் சினிமா நட்சத்திரங்களுக்குத்தான் உரியன. அவற்றை அவர்கள்தான் அணியவேண்டும். மாணவிகள் அவற்றை அணியக்கூடாது, போடவும்கூடாது.

## மட்டும் படாடோபமும்

படிப்பில் முன்னேறவேண்டும் எனக் கருதும் மாணவிகள் மட்டும் படாடோபமும் அற்ற ஆடைகளை அணிந்து தூய்மையாகவும் எளிமையாகவும் காட்சியளிக்கவேண்டும். பண்பான முறையில் ஆடையணியும் பெண்கள் மதிக்கப்படுகிறார்கள். மற்றவர்களின் எள்ளி நகையாடலுக்கு இடமளிக்காது தோற்றமளிக்கிறார்கள்.

டாக்டர் மு. வரதராஜன்

இன்று எங்கு பார்த்தாலும் போட்டியும் பொறாமையும் தலைவிரித்தாடுகிறது. முன்னேற்றத்திற்கு போட்டி இறந்தது. ஆனால் பின்னேற்றத்துக்கல்ல. உடைவிஷயத்தில் மாணவிகளிடையே போட்டி ஏற்படுதல் பின்னேற்றத்துக்கு அறிகுறியே யன்றி முன்னேற்றத்துக்கு அறிகுறியல்ல. இன்று மாணவிகள் மேலைத்தேசமோகம் கொண்டு அந்நாட்டவர் அணியும் உடைகளை யணிந்து தம் நாட்டுப் பாரம்பரியக் கலை கலாச்சாரத்துக்குக் குழிதோண்டுகிறார்கள்.

## போட்டி மனப்பான்மை

பெண்கள் குறிப்பாகக் கல்வி கற்கும் மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு ஆடைகளை யணியவும்கூடாது அதேபோன்று போட்டியிட்டுக்கொண்டு அணிகலன்களை நாடவும்கூடாது.

போட்டி எங்கு ஏற்படவேண்டும்? அறிவு கலைத்துறைகளில்தான் போட்டி யேற்படவேண்டும். இதற்தில் போட்டியிட்டால் முன்னேற்றமடையலாம் அறிஞர்களாகலாம். ஆடை, அணிகலன்களில் போட்டியிட்டால் ஏற்படும் பலன் என்ன? வீண் பொருள்விரயம்தான். மாணவிகள் தங்கள் ஆர்வத்தை அறிவுத்துறைப்பக்கம் திருப்பிவிடவேண்டுமே யன்றி ஆடையணிகலன்களின் பக்கமல்ல'

## பெண்களால்தான்...

பெண்களால்தான் ஒரு சமூகம் வளரவேண்டும். அவர்களின் வளர்ச்சி சமூக வளர்ச்சி, அவர்களின் வீழ்ச்சி சமூகவீழ்ச்சியாகும் ஆண்கள் படிப்பதைவிடப் பெண்கள் படித்தால் சமூகம் வளரும். ஆகவே மாணவிகள் போட்டிபோட்டு ஆடையணிகலன்களைப் பெற்றோரின் பணத்தை விரயமாக்கி அணிவதைவிடுத்து அறிவு கலைத்துறைகளில் போட்டியிடவேண்டும். உயர்ந்த நல்ல நூல்களைப் படிக்கவேண்டும். அதனால் நெஞ்சம் நிறைவுறும். பரீட்சைகளில் தோல்விகாணாது வெற்றியீட்ட கீழ் வகுப்புகளில் இருந்தே நன்றாகப் படித்துத்தேறவேண்டும்.

# குடும்பச் சுடர்

தயாரிப்பு குணம்

## பாராட்டுக்குரிய..



சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு விநோதமான தேர்தல் நடந்தது. அங்கு 'உலகின் மிகச் சிறப்பான பாராட்டுக்குரிய பெண்மணி யார்?' என நடைபெற்ற தேர்தலில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியே தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு பிரதமர் அளித்த அடக்கமான பதில் இதுதான்: 'நம்முடைய பணியை மற்றவர்கள் பாராட்டினால் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே! இருப்பினும், மற்றவர் பாராட்டுகிறார்களா? அல்லது குறை சொல்கிறார்களா என்பதைவிட நாம் சரியான வழியில் போய்க்கொண்டிருக்கிறோமா என்பதுதான் முக்கியம்'.

— 'மணியன்'

## கவலை வேண்டாம்

உங்கள்தோல் இயற்கையின் பாதிப்பால் நாளுக்கு நாள் கறுத்துக்கொண்டு வருகிறதா? கவலைப்படாதீர்கள்.

தேசிக்காய் வெள்ளரிக்காய் ஆகிய இரண்டினது சாற்றையுங்கலந்து தோலின் மேல் நன்றாகத் தேய்த்து 15 நிமிடங்கள்வரை ஊறவிடுங்கள். சந்தனத்தையும் இதனுடன் சேர்த்துக்கொள்ளலாம் இது தோலுக்குக் குளிர்ச்சியையும் பளபளப்பையும் கொடுக்கும். 15 நிமிடங்களின் பின்னர் இளஞ்சூடான வெந்நீரில் குளிக்கவேண்டும். படிப்படியாகக் கருமை மாறும். கடும் வெயிலில் செல்லக்கூடாது

# வல்லியெனும் கன்னி மடியில் வீழ்ந்த மீன், குழந்தையான கதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பின. இதனுல் உடைந்த உள்ளத்துடன் மரதவர் தலைவன் வீடுதிரும்பிய இரவே ஒருவர் கனவில் தோன்றி வல்லிநாச்சன் என்னும்பெயருடைய மாதுசிரோமணியை அழைத்துவரும்படி கட்டளையிட்டான். கனவிற்கண்ட காட்சிப்படி அவ்வூர் அப்பெருமாட்டியைத் தேடிக்கண்டு இரசோபசாரங்களுடன்கடற்கரைக்கு அழைத்து வந்தார். வல்லிநாச்சன் கடற்கரையில் நின்று 'கன்றுகட்டிப் பாற்கறந்தேனேயன்றி வேறொன்றறியேன் மாயவா பரந்தாமா பத்மநாபா' என்று கூறித் தன் முன்றானையை நீட்டக் குழந்தை தவழ்ந்துவந்து ஏறிக்கொண்டது. எல்லையில்லா ஆனந்த வெள்ளத்திற்றிளைத்தபரதவ குலத்தினர் குழந்தையையும் பெண்ணையும் பல்லக்கிலேதாங்கி அம்மையாருடைய இல்லத்தை நாடிச்சென்றனர். மணலிலே நடந்த களைப்பினலே ஓரிடத்திலே பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு அருகே இருந்த கிணற்றில் தாகசாந்தி செய்தனர். திரும்பி வந்து பல்லக்கைத் தூக்க முயன்றபோது அசைக்கமுடியாமல் இருந்தமையால் அங்கே இருந்த வொன்றை நிழலில் இறைவனுக்குக் கோவில்எழுப்பினர். வல்லிநாச்சனின் வழித்தோன்றல்களே கோவிற்பூசையையும் நித்திய நைமித்தியங்களையும் கவனித்துவந்ததோடு தமக்குச் சொந்தமான ஆலயச்சுற்றுடலுக்கான காணியையும் நிலபுலங்களையும் தர்மசாதனஞ் செய்தனர். வல்லிநாச்சன் வழிவந்த தாமர், நினைவர் என்னும் சகோதரர் இருவரும் இவ்வாலயத்தை உருவாக்கிய பெருமைக்குரியவராவர். இவர்கள் அக்காலத்தில் 'உடையார்' என்னும் பதவி வகித்தமையால் அவர்களுடைய வீடுகள் இன்று தாம உடையார்வளவு, நினைவாத்தை உடையார் வளவு என அழைக்கப்படுகின்றன. இவர்கள் பூஜாகாரியங்களைச் செய்துவருங்காலத்தில் இரு பெரும் அற்புதங்கள் நிகழ்ந்தன. ஆலயத்தில் தினப் பாவிப்புக்கென தீபதூபங்களையும் தட்டுமுட்டுக்களையும் வீட்டிற்கொண்டுவந்து பெட்டகமொன்றிற் பூட்டி வைப்பது வழக்கம். ஒருநாட்கள்வர் புகுந்து பெட்டகத்தை உடைப்பதற்கு முயன்றபோது பாம்பொன்று சீறியெழுந்ததைக் கண்டு அவர்கள் பீதியடைந்து ஓடிவிட்டனர். அப்பெட்டகம் இன்னும் அவர்களின் சந்ததியினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஒருநாள் பூசகர் கோவிற்பூசையை முடித்து வந்து வழமைபோல் கவடு இராய் என்னும் வயல்வெளியில் உழுதுகொண்டிருந்தார். அன்று ஒருவர் பலாப்பழத்துடன் கோவிலுக்குத் தன் நேர்த்தியை நிறைவேற்றப் போய்க்கொண்டிருந்தார். பூசகர் அவரை அழைத்தபோது அவ்வடியார் விரதத்தைச் சொன்னதும் அவ்விடத்திலிருந்த தாமரைத் தடாகக் கரையில் நைவேத்தியம் செய்து பாதியை எடுத்துக்கொண்டு மீதியை அவரிடம் கொடுத்துவிட்டார். அவ்வடியார் மிக்க மனவேதனையுடன் வீடுவந்து இரவு தூங்கும்போது கண்ணபிரான் கனவிற்தோன்றி 'பலாப்பழம் மிகவும் இனிமையாய் இருந்தது. அடுத்தமுறையும் ஒன்று கொண்டுவா' எனப் பணித்தருள அவ்வடியார் இரவோடிரவாக மரத்திலிருந்த பழமொன்றையும் கொண்டு ஆழ்வார் சுவாமி ஆலயத்தையடைந்து பூசகரிடம் ஒப்படைத்து சம்பவத்தையும் சொல்லி ஆனந்த பரவசமானர்.

இவ்வாறு பூசகர்களாய் இருந்த தாமர், நினைவர் இருவரும் பெருநிலக்கிழாராய் இருந்தமையால் தமது சொத்துக்களிற் பெரும் பாகத்தைத் தர்மசாதனம் செய்து கோவில் அமைந்திருந்த 'இறக்கந்தரிச்சான்' என்னும் காணியையும் ஆழ்வார் பெயரிலே எழுதி அர்ச்சகர்களை நியமித்து கோவில் நிர்வாகத்தைமேற்கொண்டனர். இவர்களின் வழித்தோன்றலே இன்றும் நாச்சிமார் நாதம்பிரான்கோவில் பாதுகாப்பாளராக இருக்கிருர். வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தின் ஆதிகர்த்தாக்களின் வழிவழி வந்த அவ்வூர்மக்களின் படிகளில் வளர்க்கும் மாடுகளுக்கு அடையாளமாக ஆழ்வாரைக் குறிக்கும் 'ஆ' என்ற அட்சரமும் வையாபுதமான சக்கரமும் இன்றுவரை இடப்படுவது ஒரு சிறப்பாகும்.

கோவிலின் ஆதிமூலம் சக்கரமாகும். சூடிக்கொடுத்த சுடர்க் கொடிஆண்டாளுக்கு ஓர் ஆலயமும் பள்ளிகொள்ளும்பரந்தாமனுடைய தலையாய் அமைந்த அரவுக்கோர் கோவில் நாதம்பிரான் என்றபெயரிலும் அமைந்துள்ளன. கோவிலுக்கு மேற்கே பிள்ளையார் கோவிலும் அருகாமையில் தாமக்குளமும் அமைந்துள்ளன. இறைவனுடைய திருநாமத்தினடையாளமாக இடும்வெண்ணிறமான திருமண்(நாமம்) நாமக்குளத்திலேதான் வெட்டியெடுக்கப்படும். இயற்கையாய் அமைந்திருக்கும் இச்சிறப்பை எங்கும் காணமுடியாது.

## உற்சவங்கள்

புரட்டாதித் திங்களில் வரும் பூரணையில் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். நியமம் தப்பாது கொடியேற்று விழா ஆரம்பமாகி பட்டுத் தீர்த்தத்துடன் பூர்த்தியாகும் பெருவிழாவில் வெண்ணெய், கஞ்சன்வேட்டை என்னும் சிறப்பு விழாக்கள் இடம்பெறும். வீம ஏகாதசி வைகுந்த ஏகாதசி இரண்டும் விசேஷமாகக்கொண்டாடப்படும். ஒவ்வொரு ஆனிமாதமும் ஆண்டவனின் அதி சிறந்த நாட்களாகும். திருமால் பவனியில் கருடன் ஐந்துதலை நாகம் அநுமான் ஆகிய வாகனங்கள் இடம்பெறும். இவற்றையே ஆழ்வார்களும் கம்பரும் வியந்து பாடியுள்ளனர். சொல்லின் செல்வனும் ஹநுமான் இறைவனைத்தாங்கித் தீர்த்தோற்சவத்துக்குச் செல்லும் காட்சி அளப்பரியது.

## இயற்கை வளனும் ஏற்றசூழலும்

ஐந்திணை நெறிகளில் மருதமும் நெய்தலும் கலந்த ஊர்தான் வல்லிபுரம் பருத்தித்துறையிலிருந்துபாசிலைப் பள்ளிவரை நெய்தல் நிலம் மருதக்கேணி நெடுஞ்சாலைக்கு மேற்கே பரந்து விரிந்துகிடக்கிறது மேல் பாகம் மருதநிலமாகக்காட்சியளிக்கிறது நெய்தல் கடற்கரைப்பக்கமாக மணல் வெளியாயும் சிறு சிறுகுன்றுகளையொத்து மணல் மேடுகளாயுமமைந்தனது அடம்பன் எடுக்கலி தாழை இராவணன்மீசை சவுக்கு முந்திரிகை முதலிய நெய்தற்குரியனங்களுடன் பனையும் தென்னையும் ஆங்காங்கே விரவியுள்ளன கோவிற்சுற்றுடலில் புன்னை இலுப்பை போன்றபெருமரங்களுண்டு நாச்சிமார் கோவிலின் மூலஸ்தானத்தில் இத்தி மரங்கள் தொகையாயுண்டு. மணற் கூபங்களிலுள்ள நீர் தேவாமிர்தம்போன்றிருக்கும் கிழக்கேயுள்ள 'கல்வளை' என்றபகுதியிற் கண்ணைப் பரத்தக்களையும் கட்டிடங்களின் இடிபாடுகளையும் காசுகோளிகளையும் பழம்பொருள்களையும் காணலாம்.

மருத நிலத்தின் நடுவே பெரிய தாமரைத்தடாகம் உண்டு. சேரதன உளவோ திருசேர்ந்தார்க்கு என்பது போல திருமகளின் இருப்பிடமாய் அக்குளம் மிளிர்கிறது. மாரியெல்லாம் சூரியனுலே. அந்த மாரிகாலத்தில் நெற்கழனிகள் எல்லாம் பசுமைப்பசேலென்றிருக்கும். ஏர் உழுகின்ற ஓசையும் களைபிடுங்கும் உழத்தியர் காட்சியும் பொலியடிக்கும் பொன்னுன காட்சியும் மருதத்துக்கே சிறப்பாயமைந்திருக்கும். வயல்வெளியைச் சுற்றி பனங்காணிகள்வரிசையாய் அமைந்திருக்கும், நெல் வெட்டிமுடிந்ததும் வரித்தலை, வெள்ளரித் தோட்டங்கள் ஓலைகோலியாலடைக்கப்பட்டு சிறுசிறு தோட்டங்களாயமைந்திருக்கும். தோட்டத்துக்குத் தேவையான நீர் உடனடியாகத் தேவைப்படும் 'தரவு'களிலிருந்தகைப் பட்டையால் அள்ளி வார்க்கப்படும் கண்ணராவியான காட்சி கமக்காரரின் கஷ்டத்தை வெளிப்படுத்தும். மாசியில் கதிர் முற்றித் தலை சாய்ந்து காற்றுக்கு அசையும் காட்சியைச்சொல்லும்போது ... புலவர் சின்னத்தம்பியவர்கள் சேக்கிழாரின் பின்வரும் பாடலை எடுத்துக்கூறுவார்.

"பத்தியின் பாலராகிப்
பரமனு''க்காளாம் அன்பர்
தத்தமில் கூடினர்கள்
தலையினுல் வணங்குமா
போல்
மொய்த்தநீள் பத்தியின்
பால்
முதிர்தலைவணங்கிமற்றை
வித்தகர் தன்மைபோல
விளைந்தனசாலியெல்லாம்.

இவ்வாறு பெருமைமிக்க ஆலயம் மற்றைய சாசனங்களிலும், அத்தாட்சிகளிலும் கோவிற்பணியாளருக்குக் கொடுக்கப்பட்ட உரித்துக்களிலும் இவ்வாலயத்தின் பெயர்'வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில்' என்றே குறிக்கப்பட்டுள்ளது. சீரும் சிறப்பும் கொண்ட ஆலயத்தின் சுற்றாடல் எவர்மனதுக்கும் நிம்மதியளிக்கும் அருட்காட்சி கொண்டதாகும். பால்போற் பரந்த மணல்வெளியில் அமைந்திருக்கும் ஆலயம் எல்லாருள்ளங்களையும் தன்வசப்படுத்தி ஆத்மீகத்தையும், அமைதியையும் சந்துஷ்டியையும், அழகையும் அளிக்கும்சர்வவல்லமையும் பொருந்திய திருத்தலமாகும்.

## மக்களும் வாழ்வும்

இயற்கையோடியைந்த இறையும், இறையோடியைந்த வாழ்வும் கொண்ட மக்களின் ஜீவியம் கமத்தையும், பனையையும் பெரும்பாலும் நம்பிவாழும் வாழ்வாகும். உழுதுண்டு வாழுமவர்கள், பதனீர்க்காலத்தில் பனங்கட்டித் தொழிலிலும் ஈடுபடுவர். சிறுகைத்தொழில்களும், குடிசைக்கைத்தொழில்களும் ஊக்குவிக்கப்படும் இக்காலத்தில் பதனீரிலிருந்து பெறப்படும் வெல்லமும், பனையிலிருந்து பெறும் பிரயோஜனங்களும் வெளிநாடுகளுக்கு அனுப்புமளவுக்கு நம் நாட்டின் தொழில் வளர்ச்சி காணுதிருப்பது பெருங்குறையாகும். கண்ணுடித் தொழிற்சாலை அமைக்கும் சூழ்நிலைகளுக்கான அடிப்படைமூலப்பொருளான மணல் வல்லிபுரத்தில் இருந்தும் மணல்மேடாக இன்றும் காட்சியளிக்கும் இக்கிராமம் ஒருகாலத்தில்தொழிற்பேட்டையாகும் என்பதில்சந்தேகமே இல்லை. வல்லிபுரத்தில் வாழ்ந்த மூச்சம் புலவுச் சாமியார் சமாதியடைந்துவிட்டாலுங்கூட ஒரு காலத்தில் பெரியசித்தராயும்இருந்தார். இவர் இந்தியாவிலிருந்து இங்கு வந்து வாழ்ந்த பெரியார். இவரைவிட இடைக்காட்டுச் சாமியார் வல்லிபுர ஆழ்வாரில் மிக்க ஈடுபாடுடையவர். வெண்துகிற்கட்டிய இப்பெரியார் வாமனவடிவமாய்க் கையிற் கோலுடன் நெற்றியிற் பரந்த வெண்ணீறுடன் காட்சியளிப்பார். ஆயிரத்திலோர் வார்த்தைஅருள்வாக்காகச்சொல்வார். இவர்களைவிட அவ்வூரில் வாழ்ந்த செல்லையாச் சட்டம்பியார் சிறுபான்மைமக்களின் வீடுவீடாகச்சென்று அவர்களைப் பள்ளிக்கு வைத்து எழுத்தறிவித்த இறைவனுமாகும். அவரையே குருவாகக்கொண்ட விஞ்சி(த்தம்பி) இன்று பத்தினிக்குக் கோவில் எடுத்து குருவே துணையென்றுவாழும் ஒருவராய் மிளிர்கிருர். திருப்பாணழ்வாரையும் நந்தனையும் சிரமேற்போற்றும் சமயங்களின் வழிநின்றொழுகும் சமுதாயம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை மறந்து இன்னும் ஆழ்வாராலயக் கோவிற் கதவுகளைத் திறந்துவிடாமல் இருப்பது சமயத்துக்கே இழுக்காகும். (முற்றும்)

## நாடகங்களுக்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுசேர்ந்து ஒருமன்றம் நிறுவவேண்டும். ஒருமாதத்திற்குக் குறைந்ததுஒரு நாடகத்தையாவது மேடையேற்றவேண்டும். அதற்குப் போதிய பணம் வேண்டும். பணம் சேர்ப்பதற்கான வழிவகைகள்பற்றி சிந்திக்கவேண்டும்.

திரு ஏ ரி அரசு: நாடகத்தில் ஓவர் நடிப்பு அவசியம் என்பதுதான் என்கருத்து. வாழ்வில் ஒருசோகச் சம்பவம் நடக்கும்போது, அது திடீரென நடந்துவிடுகிறது. அச்சோகச் சம்பவத்தை நாடகத்தில் காட்டும்போது, அதற்கேற்றமுகபாவம் நடிப்பு அவசியம். அதனுல் இங்கே ஓவர் நடிப்பு தேவைப்படுகிறது,

திரு அ பிரான்சிஸ்: மக்களுக்குப் பிடிக்கும் என்பதற்காக ஒரு நாடகத்தையே திரும்பத்திரும்பப் போடக்கூடாது. புதிய நாடகங்களை புதுப்புதுக் கருத்துக்களுடன் தயாரிக்கவேண்டும். சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய வாழ்வின் பிரச்சினைகளை எடுத்துக்காட்டக்கூடிய நாடகங்களைத்தெரிவுசெய்து மேடையேற்றுவது பொருத்தமானதாகும்.

விடியவிடிய நாடகம் நடத்துங்காலம் மலையேறிவிட்டது. இது யாழ்தேவி காலம் 2 மணித்தியால நாடகத்தைத்தான் மக்கள் விரும்புவார்கள். ஓரங்க நாடகம் 1 மணித்தியாலமும், மற்ற நாடகங்கள் 2 மணித்தியாலமும் இடம்பெறவேண்டும்.

திரு செல்வரத்தினம்: நாடகங்கள் அதிகநேரம் எடுக்கக்கூடாது என்று இங்கு தெரிவித்தார்கள். இந்த கருத்தரங்கு 5 மணிநேரம் நடைபெற்றது. எல்லோரும் இவ்வளவு நேரமும் இருந்து கலந்துகொண்டார்கள் எதுவும் தரமானதாக இருந்தால் மக்கள் நேரத்தைப் பற்றி அக்கறைப்படாமல் இருந்து ரசிப்பார்கள் என்பது என்கருத்து

திரு அருமைநாயகம்: இங்குள்ள நாடகங்களில் ஒளி நல்லாக அமைவதில்லையென்றும், சிறந்த ஒளி அமைப்பாளர் இல்லையென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது சிறந்த ஒளி அமைப்பாளர் இங்கு இருக்கின்ருர்கள் அதற்கான உபகரணங்களும் மின்சார வசதியும்தான் இங்கு இல்லை இவற்றைப் பெற்றுத்தந்தால் சிறந்த முறையில் ஒளி அமைப்பை ஏற்படுத்திக் காட்டுவோம்.

திரு செல்வரத்தினம் இப்படியான கருத்தரங்குகள் மாதம் மாதம் தொடர்ந்து நடைபெறவேண்டும், அப்படியானுல்தான் நாடக உலகில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம்.

## சிறுகதை

(3-ம் பக்கத்தொடர்ச்சி

யாக இருந்தார்! இயற்கையான மனநிலைகளைத் துறவறத்தை மேற்கொள்பவனு அல்லது வாழ்க்கையின் ஏமாற்ற உணர்வுகள் காரணமாக வெறுப்புற்று துறவியாக மாறுபவனு உண்மைத் துறவி என்று உலகத்தில் பிரச்சினையாக்கப்படும்போது அதற்குரிய பதில் ஜோசெப் பிடம்தான் இருக்கும்! பீற்றர் பிதாவே என்ருன்.

ஜோசெப் கட கட என்று சிரித்தார்

'வெறும் ஆசாபாசங்களின் அரவணைப்பில் தான் நான் இன்னும் நிற்கிறேன்... நான் எப்படி உண்மை பாதிரியாக இருக்கமுடியும்'. பாதிரியார் சொல்லிக்கொண்டே சிரிக்கிருர், பீற்றருக்கு ஒன்றும் புரியவில்லை.

'உள்ளத்தை அடக்குபவன்தான் உண்மையான துறவி வெளிமனத்தை அடக்கினுலும்... வாழ்க்கையில் நிறைவேருத எண்ணங்கள் இந்த உள் மனதிலே தான் தஞ்சமடைகின்றன. மனிதன் தன்னுடைய தோல்வியை இன்னென்ருல் நிரவத்தான் துடிக்கிருன். அவன்வாழ்க்கையில் பழைய பிரச்சினைகளை சந்திக்கும்போது மீண்டும் அவனுடைய மனம் தோல்வியை எண்ணித்தான் குழம்புகிறது.

இந்தக்குழப்பம் வைக்கம் எல்லாம் மதத்துக்கு ஒரு வலியாக இருக்கும் ஒருதுறவிக்கு இருக்கக் கூடாது தான் பதை ஜோசேப் உணரத் தொடங்கிவிட்டார். தன்னுடைய தோல்வியை மறைக்கவே இந்த பாதிரி வேடத்தை போட்டிருப்பதாக அவருடைய உள்மனம் உறுத்துகிறது. மத நம்பிக்கைகள் வழிபாடுகள் உபதேசங்கள் எல்லாம் இரண்டு உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தன்னுல் கறைபட்டுவிடும் என்று ஜோசெப் கருதுகிருர் ஆசாபாசங்களை நினைத்து தன் உள்ளத்தை அருவருப்பாக்கி விட்டதாகக் கருதும் ஜோசெப் அவசரம் அவசரமாக தன் ஆடைகளைக் களைகிருர். பீற்றர் மீண்டும் மீண்டும் பிதாவே என்ருன்.

'பாவமன்னிப்புப்பெற எல்லோரும் வந்துகொண்டிருக்கிருர்கள்...' பீற்றர் கத்திக்கொண்டே இருந்தான்.

'நான் அதற்குத் தகுதியற்றவன்... மீண்டும் நான் ஆசாபாசம் என்ற அருவருப்பான உலகத்துக்குள் விழுந்துவிட்டேன்... எனக்காக எல்லோரும் பிரார்த்தியுங்கள்' என்று சொல்லிக்கொண்டு அவசரம் அவசரமாக சாதாரண உடையுடன் வெளியே போய்க்கொண்டிருக்கும் ஜோசெப்பைப் பார்த்து ஒன்றும் புரியாமல் ஆச்சரியத்துடன் முழித்துக் கொண்டிருக்கிருன் பீற்றர்...!

(யாவும் கற்பனை)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p m.
Sat. Sundays 10-30
Jeanne Moreau
in
THE BRIDE
WORE BLACK
(color)

தினசரி பி.ப. 2-00, 9-45
ஏ. பி. நாகராஜன்—
ஜி. வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை
நல்லதங்காள்
புதிய கொப்பி

இன்று மட்டும்
வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
பி.ப 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர். - பத்மினி
ராணி சம்யுக்தா

நாளை முதல்
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை
உறவு

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-30, பி.ப.2-30, மாலை6-30 இரவு10மணி
பின்னணிப் பாடகர்கள்
★ ரி. எம். சௌந்தரராஜன்
★ ஏ. எல். ராகவன்
ராஜஸ்ரீ — விஜயகுமாரி — நாகேஷ்
நடித்த
கல்லும் கனியாகும்

ராணி (யாழ்ப்பாணம்) ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிநேகிதி

வின்சர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

4-வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
(காலை 10-30 பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00)
மற்றும்
கெப்பிட்டல் — பிளாசா
திரைகளில்

நடிகர் திலகம்
சிவாஜி
கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30,)
★ ஆனந்தன் ★ ஹேமலதா
அசோகன் ★ காமினி ☆ ராம்தாஸ்
நடித்த
விஜயபுரி வீரன்
[புத்தம் புதிய கொப்பி]


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை வானொலி

ஆயிரம் தடவைக்குமேல் மேடையேற்றிய நடிகமணி வி. வி. வைரமுத்துவின் 'மயான காண்டத்தை' பார்க்கமுடியாத பல்லாயிரக்கணக்கான ரசிகர்களுக்கு கேட்டு மகிழ ஒரு சந்தர்ப்பம் அளித்த இலங்கைவானொலியை பாராட்டத்தான் வேண்டும். வி. வி. வைரமுத்துவின் மிடுக்கான குரலுக்கு ஈடுகொடுத்து நடித்தார், சந்திரமதியாகக் குரல்கொடுத்த சுப்புலட்சுமி காசிநாதன்! இந்நாடகத்தை வானொலியில் தயாரித்தளிக்க 400 ரூபாய் முடிந்ததாம்!


அடைவு நகை
ஏலவிற்பனை

கொழும்பு-12, செட்டியார் வீதி 83-ம் நம்பர் சிவசக்தி இல்லத்தில் அடைவு பிடிப்பவராகிய வே. கா. சுந்தையா அவர்களிடம் 1-5-69 முதல் 30-8-70 வரை அடைவு வைத்து மீட்கப்படாத அடைவு நகைகள் யாவும் 30-9-71 ஆம் திகதி காலை 8-30 மணி முதல் மேற்படி ஸ்தாபனத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

க. சோமசுந்தரம்
ஏல விற்பனையாளர்

103, கொழும்பு வீதி,
கண்டி.
100, 102 புத்தளம் வீதி
குருநாகல். 3017

அறிவித்தல்
யாழ். மாநகர மின்சார
இலாகா
மின்சார விநியோகத் தடை

கண்டி வீதி நாவலர் வீதிச் சந்திக்கும் கண்டி வீதி நெடுங்குளம் வீதிச் சந்திக்கும் இடையே உள்ள கண்டி வீதியில் உள்ள மின்சார பாதைகளில் மிகவும் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் அதன் வழியாகப் பயனடையும் மின்சார பாவனையாளர்களுக்கு மின்சார விநியோகம் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 8-ந் திகதி வரைக்கும் தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடைப்படும் என்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறிவிக்கின்றேன்.

ஒப்பம்
ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மின்சார இலாகா,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
10-9-1971 3018

ரகுலஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
DEATH LAID AN EGG

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-ராமதாஸ்
நடித்த
வீரத்திருமகன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி—சரோஜாதேவி
ரவிச்சந்திரன்—பாரதி
தினசரி 2-30 6 30 10-00 சனி, ஞாயிறு 10-30 நடித்த
சிநேகிதி

யாழ். ஆணழகன் போட்டி
இடம்: சென்ஜோன்ஸ் கல்லூரி
காலம்: 1 10—71
மேற்பிரிவு 21 வயதுக்குமேல்
கீழ்ப்பிரிவு 21 வயதுக்குக் கீழ்
விண்ணப்பப்பத்திரங்களை சென்ஜோன்ஸ் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு தேதி : 25 9—71
3019

வரி விளம்பரம்

காலம் பொருத்தமானது. ஒரு பைக்கட் மில்க்வைற் சவர்க்காரத்துடன் அநேக துணிகளை சலவைசெய்யலாம். பெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் உற்பத்தியாக்கப்பட்ட ஒரிஜினல் பாகங்கள் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலையத்துக்கு தேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. ஊழியர் சகாயநிதி போனஸ் மற்றும் சலுகைகள் உண்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3568 C/O ஈழநாடு. யாழ்ப்பாணம் 3568

யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலையத்துக்கு நெசவு கல்லூரியில் பயிற்சிபெற்றுத் தேறிய ஆசிரியை தேவை. நல்ல சம்பளம், ஊழியர் சகாய நிதி, போனஸ் மற்றும் சலுகைகள் உண்டு. தகமைகள் குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3567 C/O ஈழநாடு. யாழ்ப்பாணம். 3567

3/4 அல்லது 1 கியூப் "கிரஷர் சிப்பிஸ்" வெட்டி விநியோகிக்க தேவை. விவேகானந்தன், - தெணியம்பை வல்வெட்டித்துறை. 3565

8 தொழிலாளிகளை சேகரித்தும், வைத்தும் எனது "கிறசரில்" மதனாசிரி ஸ்ரேசன் அருகாமையில், தொழில் நடத்தக்கூடிய கங்காணி தேவை, சகல வசதிகளும் செய்து தரப்படும். விவேகானந்தன்- 'தெணியம்பை' வல்வெட்டித்துறை. 3564

பௌதிகம், இரசாயனம், உயிரியல், பிரயோககணிதம் ஆகிய பாடங்கள் க.பொ.த. (சாதாரண) வகுப்புகளுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் தேவை. தராதரப்பத்திரப் பிரதிகளுடன் உடன் விண்ணப்பிக்கவும். (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்). விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: கலைவாணி கல்விநிலையம். கதிரிப்பாய், அச்சுவேலி. 3562

விற்பனைக்கு
வீட்டில் வளர்ப்பதற்கேற்ற பல வகை மீன்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. V. T. சுந்தரலிங்கம். 158/3 நாவலர் வீதி, (கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி சந்தி) யாழ்ப்பாணம். 3321

விற்பனைக்கு
1 1/2 பரப்புக் காணியுடன் கல்வீடு கிணற்றுடன் பள்ளிக்கூடமில், கோயில் சமீபமானது. றோட்டு வைப் தண்ணீர் வசதியுண்டு. கண்டுக்குளி - கொழும்புத்துறை மெயின் றோட்டிற்கு அருகாமையில். விண்ணப்பிக்க: 'மிதிலா', 49, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி. 2659

பத்மினி ஜவ்வாது பத்திகள்: கோவில்களிலும், இல்லங்களிலும், விழாக்களிலும் உபயோகிக்கக் கூடிய சிறந்த மலிவான பத்திகள் எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 160 செட்டியார் தெரு. கொழும்பு. 3523

மாதாந்த சஞ்சிகை 'இந்து' சமய ஏடு இம்முறை நவராத்திரி விழாவை முன்னிட்டு கவர்ச்சியான படங்களுடனும் கூடிய பக்கங்களுடனும் வெளிவருகிறது. வருட சந்தா ரூபா 5/- விபரங்களுக்கு ஆசிரியர் 'இந்து' 135, பருத்தித்துறை வீதி, நல்லூர். 3561

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு ஐந்தாம் வகுப்பு மாணவர் தேர்ச்சிக்கு புதுமுறை மாதிரி வினாக்கள். கணிதம்-75 சதம், தமிழ்-75 சதம் ஆங்கிலம்-75 சதம். சூழல்-75 சதம். விவேகானந்த சபைப் பரீட்சைக்கும் அமைவான சைவசமய பாட மாதிரி வினாக்கள் 95 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்— புத்தகசாலை, யாழ்ப்பாணம் 3551

30 ஏக்கர் தென்னங்காணி இயக்கச்சி கண்டிரோட்டு 170-வது மைலுக்கு அண்மையில் (அரை வாசி நிறுத்தியது) 10 ஏக்கர் காய்க்கும் தென்னம்பிள்ளை. முழுமையாகவோ 10 ஏக்கர் துண்டுகளாகவோ விற்கப்படும். நாகரத்தினம் பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3576

FOR SALE
4 Blocks of excellent Coconut land called Houseman Thoddam opposite to Tampu Toddam, each of 7 lachams, facing Kachcheri Road, 1 1/2 miles from Chavakachcheri town. good water, suitable for building or agriculture. Arul Nathaniel. 25, Chemmany Rd, Nallur, Jaffna. 3556


## அடங்கா...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள்.

1843-ம் ஆண்டு தோற்றப்பட்ட ஒரு வால்வெள்ளி அதிகம் பிரபை உடையதாய் பகல் நேரத்திலும் ஒளி வீசிக்கொண்டிருந்தது. 76 ஆண்டுகளுக்கொருமுறை தோன்றும் 'ஹாலி' தூமகேது 1682-லும், 1758-லும் 1835-லும் 1909-லும், காணப்பட்டது. இனிமேல் அது 1984 அல்லது 1985-ல் தோற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மணி மொழி

தப்புச் செய்கிறவர்களைத் தள்ளக் கூடாது. நாமே தப்புச் செய்தால் நம்மை உதறித் தள்ளுகிறோமோ? நம்மை நல்லவராக்கிக் கொள்ள ஆயுள் முழுவதும் முயலுவது போலவே, மற்றவர்களையும் நல்லவராக்கிக்கொள்ள முயல வேண்டும்.

காரணமில்லாத அன்பு எங்கும் பரவ வேண்டுமானால் குரு பக்தியில் ஆரம்பிக்க வேண்டும். பிறகு லோகம் முழுவதையும் குருவாக நினைத்து சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லா அன்பைச் செலுத்த வேண்டும். அப்பொழுது உண்டாகும் ஆனந்தந்தான் பரிபூரண நிலை அதுவே பிரம மானந்த நிலை.

— காஞ்சி காம கோடி






## "கூட்டுச்சேராக் கொள்கையே சிறந்தவழி"

### ஸ்ரீமா-சிங் கூட்டறிக்கை

கோட்டை, சனி

"நெருக்கடி நிலைமைகளைச் சமாளிப்பதற்கு கூட்டுச் சேராக்கொள்கையே சிறந்த வழி" என்று இன்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், இந்திய வெளியுறவு மந்திரி திரு. சுவர்ண்சிங்கும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு மந்திரி மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் திரும்பினார். இந்த அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

இந்து மாசமுத்திரத்தை அணு ஆயுதச் சூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கருத்தை இருகுதியினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

1964-ம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் திருப்திகரமாகச் செயல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் பலவேறு விஷயங்கள் குறித்து இரு நாடுகளிடையேயும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அரசினர்

## வைத்தியசாலை இம்மாத இறுதியில் திறக்கப்படும்

(காவிட்டபுரம் நிருபர்)

பல லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை இம்மாத இறுதியில் திறக்கப்படவிருக்கிறது.

காங்கேசன் துறையில் அமைந்திருக்கும் அரசினர் வைத்தியசாலை சிமெந்துத் தொழிற்சாலை தூசிகள் படிந்து பங்கம் ஏற்படுத்துவதாக பல பொது நிறுவனங்கள் புகார் செய்துவந்தன.

இதைத்தொடர்ந்தே அரசு தெல்லிப்பழை - கட்டுவன் வீதியில் காணி சுவீகரித்து கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இக்கட்டிடவேலைகளைப் பொறுப்பேற்று நடத்திய அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினர் தமது வேலைகள் முடிவடைந்ததையடுத்து கட்டடங்களைப்பகுதி பகுதியாக காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. ஐ. பேரின்பநாயகத்திடம் கையளித்துள்ளனர்.

தற்போது காங்கேசன்துறை வைத்தியசாலையில் உள்ள பொருட்கள் இங்கு கொண்டு வரப்படுகின்றன.


ஈழநாடு

விரோதி கிருது வருடம் புரட்டாதி மாதம் 27-ம் திகதி (12-9-71)


## இராமாயணப் பண்பு

இலங்கையுள்ளிட்டு ஒன்பது நாடுகள் இந்தோனேஷியாவில் நடைபெற்ற இராமாயண விழாவில் கலந்துகொண்டதாகவும், விழா மிகச்சிறப்பாக நடைபெற்றதாகவும் ஒருசெய்தி தெரிவிக்கின்றது. விழாவுக்கான ஏற்பாட்டைச் செய்த இந்தோனேஷியாவையும் சிறப்பாக அதன் தலைவர் சுகார்ட்டோவையும் பாராட்டவேண்டும்.

தலைவர் சுகார்ட்டோவுக்கு இராமாயணத்தில் அதிக ஈடுபாடு உண்டாம். தமிழகத்திலும் கம்பராமாயணத்திலே, சமயவேற்றுமையின்றி பலரும் புலமை பெற்றுள்ளதிலிருந்து இந்நூல் பல சமயத்தவருக்கும் பொதுவுடைமையென்பது தெளிவு. தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளையும் தொன்றுதொட்டு பிணைத்து வருகிறது.

மேற்கத்திய கலாசாரம் புகுந்து, நமது பண்பையும் கலாசாரத்தையும் அழித்துவிடாமல் பாதுகாக்க, இராமாயண விழாவுக்கு ஒழுங்கு செய்ததாக இந்தோனேஷியத் தலைவர் தெரிவித்துள்ளார். இராமாயணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு எவ்வளவு அவசியமென்பதையும் வேறுபல கடமைகளையும் வலியுறுத்துகின்றது. அந்தப் பண்புகளை நாம் மறந்துவிடாமல் பின்பற்றி நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே இராமாயணத்தின் நோக்கம்.

இத்தவிழாவை நம் இலங்கையிலும் வசதியான சமயத்தில் நடத்தினால், நம்மக்கள் நேர்மையான நெறியுடன் வாழ்க்கைநடத்தவேண்டியதை உணரவும், முன் காலத்தில் தென்கிழக்கு ஆசியநாடுகளிடையே இருந்த கலாசார பொது உறவுகளை மீண்டும் புதுப்பித்துப் பலப்படுத்திக்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

## கண்ணன் . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணன் துணிவுடன் எதிர்த்து நின்று காலால் அவ்வண்டியை உதைத்துவிடுகின்றான் வண்டி சிதறுண்டு போய்விடுகின்றது. இதுவரை சாதாரண மானிடக்குழந்தை செய்யும் வரியத்தையே செய்துள்ளான். ஆனால் தெய்வீக பலத்தையும் வெளிப்படுத்தியுள்ளான். அதாவது வண்டி உருவில் மறைந்துநின்ற அரக்கனை அழித்தார்.

இப்படிப் பலவகையாக மக்களோடு இணைந்து கண்புரியும் செயல்களையே செய்து தெய்வீக பலத்தையும் காட்டிவிடுகின்றான்.

### அடிப்படைத் தத்துவம்

இவ்விரு அவதாரத்தின் அடிப்படைத் தத்துவத்தைக் காணும்பொழுது நாம் அறியக்கூடியது நீதி தர்மத்தைப் பின்பற்றி தெய்வீக வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு இறைவன் பக்கத்திலிருந்து ஆசுர சக்திகளை எதிர்த்து அனுகூலத்தைச் செய்தருளுவான் என்பதாகும். இவ்விரு அவதாரங்களும் இறைவனின் பூரணத்துவத்தை விளக்குகின்றன. இராமன் பகல் பன்னிரண்டு மணிக்கு அவதரிக்கின்றான் கண்ணன் இரவுபன்னிரண்டு மணிக்கு அவதரிக்கின்றான். இரவும் பகலும் சேர்ந்தது ஒருநாள். காலரூபமாக விளங்குகின்றனர். செயல்களுக்குப் பகலும் ஒடுக்கத்திற்கு இரவுமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. செயல்களைச் செய்து காட்டினான் இராமன் சாந்திக்குரிய வழியைக் கண்ணன் அர்ச்சுனனுக்கு கூறும் உபதேசமொழியாக வெளிப்படுத்தினான். இப்படி இவ்வாறு இருவரும் அவதரித்த தினங்கள் இரண்டு. ஒன்று ஸ்ரீராமநவராம், மற்றது கிருஷ்ண ஜயந்தி — ஜயந்தி என்ற சொல்லுக்கு வெற்றியைத் தரும் நாள் என்பதுகருத்து.

### கண்ணன் காட்டியவழி

சீவர்கள் மக்கள் கண்ணன் காட்டியவழியைப் பின்பற்றி வாழ்வார்களேயானால் இவ்வுலகத்தில் பல நலங்களையும் பெற்று உள்ளம் சாந்தியடைந்து அழியாத பிரமானந்தத்தை அனுபவிப்பர். கண்ணன் ஜயந்தியான இன்று அவன் புகழைப்பாடி அவன் பெயரைச்சொல்லி அவன் உருவத்தை உள்ளத்தில் தியானித்து அவன் உறைவிடத்தைச் சுத்தம் செய்து மலர்கொண்டு அர்ச்சித்தும் அவன் லீலைகளைக் கேட்டும் அவன் உருவத் திருமேனியின் அழகைக் கண்டு களித்தும், அவன் உறைவிடம் நடந்துசென்றும் அவன் திருவடியில் தண்டனிட்டுவணங்கியும் அவனருளைப்பெற்று பிறவியெடுத்த பயனைப் பெறுவோமாக.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சின்னலேனில் கேற்று வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சாரணர் விழா

(நமது நிருபர்)

வருகிற சனிக்கிழமை யாழ்ப்பாணம் பழையபூங்காவில் யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்கத்தின் வருடாந்த பாசறையும் விழாச் சடங்குகளும் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் மரத்தில் வீடுகள், பாலங்கள், முதலுதவி, தேகாப்பியாசம், திடீர் பாலம் அமைத்தல், பாரந்தூக்கி, தொங்கு பாலம், வனநடனங்கள் "பாசறைத்தீ" என்ற நாடகம் ஆதிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்

## 'நாகநா'வுக்கு சிலை நிறுவ வேண்டும்

(நமது நிருபர்)

காலஞ்சென்ற தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் குடும்பத்தினர் பரம்பரையாக வாழ்ந்து வந்த சங்கிலியன் தோப்பில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படவேண்டும் என டாக்டர் வி. கே. பரமநாயகம் தெரிவித்தார்.

மேலும் அவர், இப்பொழுது சங்கிலியன்தோப்பு வண்ணை சிவன் கோவிலுக்குரியதாக இருப்பதனால், இச்செயலுக்கு ஒரு குழுவை அமைத்து கோயில் தர்மகர்த்தாவைச் சந்தித்து ஆவன செய்யவேண்டும். அதுமட்டுமன்றி சிலை நிறுவுவதற்கு பொதுமக்களிடமிருந்து பணம் சேர்த்து சிலை நிறுவுவதோடு அதிலிருந்து மிகுதியாகும் பணத்தைக்கொண்டு நாகாவின் பெயரால் மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் அளித்து வந்தால் அவர் பெயர் நிலைத்திருக்கும் என்றும் கூறினார்.

## நீதி மன்றத்தில் மயங்கிவிழுந்தார்

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையைப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் இளம்பெண் திடீரென மயக்கமுற்று விழுந்தார்.

கோர்ட்டில் நின்ற கிராம சேவகர் ஒருவரும், பொலிஸாரும், சில பெண்களும் அவரை வெளியில் தூக்கி வந்தார்கள்.

வழக்கு சம்பந்தமாக கோர்ட்டிற்கு வந்திருந்த வைத்திய நிபுணர் டாக்டர் சி. அம்பலம் உடனடியாகச்சென்று அப்பெண்ணுக்கு முதலுதவி அளித்தார். அதன்பின் அப்பெண் மீண்டும் சுயநினைவு பெற்றார்.

கைக்குழந்தையொன்றுடன் வந்த அப்பெண்ணும், தகப்பனும் டாக்டருக்கு நன்றி தெரிவித்தனர்.

## திரைப்படம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொடிகாமம் அரசினர் பாடசாலையில் நாளை 13-ந் திகதி தகவல் பகுதியினரால் திரைப்படம் காண்பிக்கப்படவிருக்கிறது. நாளைமாலை திருக்கேதீஸ்வரம் திருப்பணிச்சபைக் கூட்டமொன்றும் இங்கு நடைபெறவிருக்கிறது

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

ஞாயிறு 12—9—71

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை. 6-25 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-30 செய்திகள் 7-00 அதிப் பாடல்கள் 7-30 மெல்லிசை 8-00 இசைவேளை 8-15 சைவசமய உரைநிகழ்ச்சி 8-30 சைவநீதி 9-00 பெண்ணுலகம். 9-30 முஸ்லிம் நிகழ்ச்சி 10-00 மத்தாப்பு 10-30 எங்கள் விருந்தளி 11-15 சிறுவர் மலர், 6-10 இடைவேளை 6-15 இசைப்பயிற்சி 6-30 கலாசார மறுமலர்ச்சி 7-00 சத்தோதைக நிகழ்ச்சி 7-30 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி.

## மணவைத்தம்பி கோரிக்கை

(நமது நிருபர்)

இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சுவர்ண்சிங்கின் இலங்கை விஜயத்தைப் பயன்படுத்துமாறு இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு வை. கே. பூரியை இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. வி. எஸ். மணவைத்தம்பி கேட்டுக்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(நமது நிருபர்

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத்தின் வடபிரதேச வருடாந்தப்பொதுக் கூட்டம் இன்று யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. பேச்சாளராக வடபிரதேச வித்தியாதிபதி திரு. டபிள்யு. டீ. சி. மஹாநந்தில கலந்துகொள்வார். மற்றும் திரு. ஏ. வைத்திலிங்கம், திரு. ஏ. பி. சி. டி. சில்வா, திரு. ரி. தங்கராசா, திரு. எஸ். பானுதேவன் ஆகியோர் கலந்து உரையாற்றுவார்கள். இக்கூட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் ஆராயப்படும்.


## விற்பனைக்கு

ஆயில் என்ஜின் 8—10 HP நல்லெண்ணெய் இன்ஜினும் 2 1/2KW 230 V டைனமோ இணைப்புடன் அதற்குரிய ஸ்விட்ச் போர்டுடனும் நல்ல நிலைமையில் விற்பனைக்கிருக்கின்றது. விலை: ரூ 4250/- குபேரன் மில், சந்திவெளி, முதக்கொம்பு டா ஞ் ச் ரோட். (கி. மா.) 3571